# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை (08-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:44


# தமிழர் மீதான கெடுபிடிகளை நீக்குவதற்கு போர்நிறுத்த உடன்பாட்டில் முக்கிய இடம்

## தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களை களைவதையும் சேர்க்க முயற்சி

வவுனியா,ஜனவரி8

**போர்நிறுத்தம் தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்படவிருக்கும் உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தற்போது தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் கெடுபிடிகளை நீக்கும் ஏற்பாடுகள் முக்கியமாச் சேர்த்துக்கொள்ளப்படும்.**

**தமிழ்க்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கான ஏற்பாடும் அந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்படும் என உறுதிசெய்யுமாறு தமிழ்மக்களின் பொது அமைப்புகள் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.**

கடந்த டிசெம்பர் 25ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக யுத்தநிறுத்தத்தையும் -

அரசுத்தரப்பு மோதல் தவிர்ப்பையும் -

பிரகடனப்படுத்தி, அதைப் பின்பற்றி வருகின்றன.

இந்த யுத்தநிறுத்த ஏற்பாட்டை ஒழுங்குமுறையான - இணைந்த - ஒரு நடவடிக்கையாக மாற்றி இரு தரப்புக்கும் இடையில் யுத்தநிறுத்தம் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளச் செய்வதற்கு இரு தரப்பினாலும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்

(02ஆம் பக்கம் பார்க்க)

## மதனராஜன் நேற்று சரண்! அவருக்கு விளக்கமறியல்!!

### எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.8

நாரந்தனையில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அத்தாக்குதலில் இருவர் கொலையுண்டமை ஆகியவை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த இருவரில் ஒருவரான ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜன் நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சரண் அடைந்தார்.

அவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் -

தேவைப்பட்டால் சட்ட மருத்துவ அதிகாரி முன் ஆஜர் செய்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, மருத்துவ வசதி வழங்கும்படியும் -

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அவர் நீதிமன்றக் காவலில் நாடாளுமன்றுக்குச் சென்று பதவிப் பிரமாணம் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்கும்படியும் -

நீதிவான் தமது உத்தரவில் குறிப்பிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்யக்கோரி பிரேரணை!

### நாடாளுமன்றில் கொண்டு வருகிறார் விநாயகமூர்த்தி



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொணடு வருகின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

நாடாளுமன்றத்தின் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குரிய நிகழ்ச்சி ஒழுங்குப் பத்திரத்தில் இந்தத் தனிநபர் பிரேரணை சேர்க்கப்பட்டிருக்கின்றது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தையும், அதற்கு 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் 1988ஆம் ஆண்டின 22ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் செய்யப்பட்ட திருத்தங்களையும் ரத்துச் செய்ய வேண்டும் என்று இந்தப் பிரேரணை கோருகின்றது.

இந்தச் சட்டங்கள் -

(I) அறிமுகப்படுத்தப்பட்டதற்கான நோக்கங்கள் எட்டப்படாமையினாலும் -

(II) எதிர்விளைவை ஏற்படுத்தியுள்ளமையினாலும் -

(III) இந்த நாட்டில் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடி, பொருளாதாரத் தடைகளை முழுதுமாக நீக்கும்படி ஐ.தே.கட்சி எம்.பிக்கள் வற்புறுத்தல்

### நேற்று ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு,ஜன.8

"வடக்கு, கிழக்கில் மீன்பிடித் தடை மற்றும் பொருளாதாரத் தடை என்பன முற்றாக நீக்கப்பட வேண்டும்"

ஐ.தே.முன்னணியின் நாடாளுமன்றக் குழு இவ்வாறு நேற்று ஏகமனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

சபாநாயகர் தவிர்ந்த ஏனைய ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் தி.மகேஸ்வரன், மீன்பிடித் தடை, பொருளாதாரத் தடை ஆகியவற்றை முற்றாக நீக்குவதாகக் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஐ.தே.கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் வாக்குறுதி அளித்ததைச் சுட்டிக்காட்டினார்.

எனவே எந்தவித மட்டுப்படுத்தலுமின்றிப் பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்றும், அதே போன்று மீன்பிடிப்பதற்கான கட்டுப்

(02ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் முன்னரங்கில்

## இராணுவத்தின் கண்முன்னே விடுதலைப் புலிகள் நடமாட்டம்

கொழும்பு,ஜன.8

நாகர்கோவில் இராணுவமுன்னரங்கக் காவலரணுக்குச் சற்று முன்பாக - இராணுவக் கட்டுப்பாட்டில் இலலாத பகுதியில் - நேற்று முன்தினம் பகல் 11 மணியளவில் சுமார் 15 இளைஞர்கள் அடங்கிய குழு ஒன்று குழுமி நின்றதாகவும் -

ஆயுதம் எவற்றையும் வைத்திருக்காத அவர்கள் சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று கருதப்படும் அந்த இளைஞர்களிடம் அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் எதுவித விசாரணைகளையும் நடத்தவில்லை என்றும் கூறப்படுகிறது.

(ஒ-4-ரி)

**உதயன் நாள்காட்டி ☛ உள்ளே!**

## 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை:

## கைதைத் தடைசெய்யக் கோரி லொஹான், சானக நீதிமன்றில் மனு

கொழும்பு,ஜன.8

தேர்தல் தினத்தன்று கண்டி உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தங்களைக் கைதுசெய்யக்கூடாதென்று பொலீஸாருக்கு உத்தரவிடும்படிகோரி முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகன்மார் இருவரின் சார்பிலும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் சரத் என்சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டன. சாட்சியங்கள் ஏதுமின்றி இவர்கள் இருவரையும் கைதுசெய்து பல மாதங்கள் சிறையில் வைத்திருப்பதற்கு முயற்சி எடுக்கப்படுவதாக அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஆனால் அரச தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் றின்ஸி அரச குலரட்ண சம்பந்தப்பட்ட இருவரையும் இக்கொலைகளுடன் தொடர்புபடுத்த போதிய சாட்

(02ஆம் பக்கம் பார்க்க)

### சுதந்திர தினத்தில் போர்நிறுத்த ஒப்பந்தம்?

கொழும்பு,ஜன.8

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்தநிறுத்த ஒப்பந்தம் இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் 4ஆம் திகதி அளவில் கைச்சாத்திடப்படும் என்றும் -

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்துக்கு முன்னர் இருதரப்புக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்றும் -

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

### நோர்வே குழு நாளை வருகை

கொழும்பு,ஜன.8

அரசு - புலிகள் பேச்சுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேயின் மூன்று உறுப்பினர் குழு லண்டனில் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்திய பின்னர் நாளை கொழும்பு வரும் எனத் தெரியவந்தது. (உ)

### தினசரி விமான சேவை 5ஆக உயரும்

கொழும்பு,ஜன.8

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவையில் தொடர்ந்து இட நெருக்கடி நிலவுவதால் அடுத்து வரும் நாள்களில் இச்சேவை தினசரி ஐந்தாக உயரும் என்று அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது இந்த சேவை தினசரி நான்கு தடவைகள் நடைபெற்று வருகின்றது.

பொதுமக்களின் வசதி கருதி இதனை ஐந்தாக உயர்த்துவதற்கான ஏற்பாடுகளை விமானப்படையுடன் தொடர்புகொண்டு தான் செய்திருப்பதாகவும் -

காலை 5.45 மணிக்கு முதல் சேவை நடைபெறும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# துணைப்படைகளுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் தொகை எவ்வளவு?

## விநாயகமூர்த்தியின் கேள்வி இன்று நாடாளுமன்றில்!

கொழும்பு,ஜன.8

துணைப்படை என்ற பெயரில் அரசுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களின் விவரங்களையும் அவற்றுக்கு அரசு மாதாந்தம் வழங்கும் தொகையினையும் நாடாளுமன்றில் வெளியிடுமாறு கோரி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

இது தொடர்பாக அவரது வாய் மூல வினாவுக்கு பதிலளிப்பது நாடாளுமன்றின் இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

புதிய நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரில் முதன்முதல் வாய் மூலக் கேள்வியாகவும் -

நாடாளுமன்றில் இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் ஒரேயொரு கேள்வியாகவும் -

விநாயமூர்த்தி எம்.பியின் இந்த வினா அமைந்துள்ளது. அவர் எழுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போனோரை சிறைகளில் தேடுவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதி

## பெற்றோர்களிடம் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோர் சிறைகளில் இருக்கின்றனரா என்பதை அறிய சிறைச்சாலைகளுக்குச் சென்று நேரில் தேடுவதற்கு சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்வதாக யாழ். அரச அதிபர் கா.சண்முகநாதன் உறுதியளித்திருக்கிறார்.

கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் குழுவினர் நேற்று யாழ்.அரச அதிபரைச் சந்தித்து காணாமற்போனோரின் பூரண விவரங்களைக் கையளித்தனர். அச்சமயமே அவர்களிடம் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த குழு ஒன்று சிறைகளுக்கு விஜயம் செய்வதற்கான அனுமதியைப் பெறுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு முயற்சி எடுப்பதாக அரச அதிபர் அங்கு கூறினார்.

காணாமற்போனோரில் இறந்ததாகக் கூறப்படும் 167 பேரும் படையினரால் கொல்லப்பட்டனர் என்பதை உறுதிப்படுத்துவதுடன் ஏனையோர் எங்கு உள்ளனர் என்ற விவரத்தையும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்பு பெற்றுத்தரவேண்டும் என்றும் -

அவ்வாறு பெற்றுத்தராவிடில் தாங்கள் மீண்டும் தமது போராட்டத்தைத் தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்படவேண்டியிருக்கும் என்றும் -

பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் அப்போது தெரிவித்தனர்.

### கோயிலில் உறங்கியவேளை

# ஊனமுற்ற பிச்சைக்காரனை காயப்படுத்திப் பணம் பறிப்பு!

## தும்பளையில் நிகழ்ந்த ஈனச்செயல்!

தென்மராட்சி,ஜன.8

இரு கால்களும் ஊனமுற்ற பிச்சைக்காரனைத் தாக்கி அவரிடமிருந்த பணத்தை திருடர்கள் பறித்துச் சென்ற ஈனச்செயல் கடந்த சனிக்கிழமை இரவு தும்பளையில் இடம்பெற்றுள்ளது.

எஸ்.சந்திரசேகரம் (வயது 62) என்ற அந்த நபர் முச்சக்கர வண்டியில் சென்று பிச்சை எடுப்பவர் என்றும் -

இரவு வேளையில் அவர் தும்பளை கடாபிணவத்தை பிள்ளையார் கோயில் மண்டபத்தில் உறங்குவதாகவும் -

கூறப்படுகிறது.

சம்பவதினத்தன்று இரவு கோயிலில் படுத்திருந்த சந்திரசேகரத்தை இனம் தெரியாத சிலர் தாக்கிப் படுகாயப்படுத்திவிட்டு, அவர் பிச்சை எடுத்து சேர்த்துவைத்த பணத்தை பறித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கோயிலுக்குச் சென்ற பக்தர்கள் தலையில காயமடைந்து சுயநினைவின்றி கிடந்த சந்திரசேகரத்தை மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்தனர். (ஒ-117)

# தமிழர் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் பின்வரும் அம்சங்கள் இடம்பெற்றிருப்பதை புலிகள் வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

★ இரு தரப்பும் போர் நிறுதம் ஒன்றை முழுமையாக அனுஷ்டிக்க வேண்டும்.

★ அனைத்து கடல், வான் தாக்குதல்களும் முழுமையாக நிறுத்தப்படவேண்டும்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச்சட்டம் போன்றவற்றைப் பிரயோகித்து மக்களைக் கைது செய்து தடுத்துவைக்கும் நடவடிக்கை முற்றாக தவிர்க்கப்படவேண்டும். ஏற்கனவே தடுத்துவைக்கப்பட்டிருப்போர் விடுவிக்கப்படவேண்டும்.

★ தரை இராணுவத்தின் தேடுதல், சுற்றிவளைப்பு, கைது என்பன நிறுத்தப்படவேண்டும்.

★ பொது இடங்கள், பாடசாலைகள், கோயில்கள் போன்ற இடங்களில் இருந்து படையினர் விலகி, படைமுகாம்களுக்குள் அவர்கள் முடக்கப்படவேண்டும்.

★ மக்களின் போக்குவரத்துக்கான கெடுபிடிகள் அடியோடு நீக்கப்படவேண்டும்.

★ தமது பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும். அதற்கு இடைஞ்சலாக இருக்கும இராணுவ நிலைகள் வாபஸ் பெறப்படவேண்டும்.

★ சுதந்திரமாக, கடல் எல்லைக் கட்டுப்பாடுகளோ, நேரக் கட்டுப்பாடுகளோ இன்றி மீனவர்கள் அனைவரும் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும்.

★ கூலிப்படைபோன்று இயங்கும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

★ வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் புலிகளின் பிரதிநிதிகள் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடத் தடைவிதிக்கக்கூடாது.

★ வன்னி மக்களுக்குப் பொருள்களும், போக்குவரத்துப் பாதையும் கிடைக்கக்கூடியதாகத் தரைவழிப் பாதை ஒன்று திறக்கப்படுவது உறுதிசெய்யப்படவேண்டும்.

- இந்த ஏற்பாடுகள் புரிந்துணர்வு உடன்பாட்டில் இருப்பதை உறுதிசெய்யப் புலிகள் விரும்புவதாகத் தெரிகின்றது.

- இந்த ஏற்பாடுகளை உடன்பாட்டில் இடம்பெறச் செய்யுமாறு வலியுறுத்தும்படி அரசு மற்றும் புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக குடாநாட்டிலும் ஏனைய இடங்களிலும் மக்கள் போராட்டங்களுக்கு முஸ்தீபுகள் நடைபெறுவதாகவும் அறியவந்தது. (உ)

# கைதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியங்கள் இருப்பதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதியான முறையில் விசாரணை செய்யப்படுவதால் இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் -

நீதிமன்றமும், பொலீஸாரும் தற்போதைய சட்டங்களுக்கு அமைவாகவே பணியாற்ற வேண்டும் என்றும் -

நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இது விடயத்தில் இவர்கள் இருவருக்கும் தனித்து விசேட கவனிப்பு காட்ட முடியாது என்று தெரிவித்த நீதியரசர்கள் அவர்களை கைது செய்வதற்கான உத்தரவை விடுத்துள்ள நீதிமன்றத்தில் அல்லது பொலீஸாரிடம் அவர்கள் சரணடைவதே நல்லது என்று குறிப்பிட்டு மனுக்கள் மீதான விசாரணையை ஜனவரி 15இற்கு ஒத்திவைத்தார்.

நேற்று நீதிமன்ற விசாரணைக்கு ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் வருகை தந்திருந்தார். (உ-4-ரி)

# மின்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளும் முற்றாக அகற்றப்படவேண்டும் என்றும் கோரும் பிரேரணை ஒன்றை அவர் முன்மொழிந்தார்.

அதை நாடாளுமன்றக் குழு ஏகமனதாக நிறைவேற்றியது.

புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்தும், புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்துவது குறித்தும் கட்டம் கட்டமாக - முன்னேற்றத்தின் அடிப்படையில் - முடிவு செய்யப்படும் என்று பின்னர் அங்கு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (உ)

# முன்னாள் அமைச்சர்கள் ஐ.தே.கட்சிக்கு ஆதரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசு யோசனைக்கு ஆதரவு வழங்க முன்னாள் அமைச்சர்கள் 6 பேர் உட்பட பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 23 பேர் தயாராக உள்ளதாக முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி கூறியுள்ளதாக வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்று தெரிவித்தது.

முன்னாள் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே, ரிச்சட் பத்திரன ஆகியோரும் தேசிய அரசுக்கு ஆதரவளிப்போர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் -

அதற்குப் பிரதிபலனாகத் தாம் பதவி எதனையும் எதிர்பார்க்கவில்லையென்றும் -

அப்படி எதிர்பார்த்தே ஆதரவு வழங்கப்படுவதாக செய்யப்படும் பிரசாரங்கள் தவறானவை என்றும் -

பௌஸி மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-ரி)

# வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள் வருகை

ஸ்ரீலங்கா வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் ஏழு பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு இன்று யாழ். வருகின்றது.

யாழ்ப்பாணம் வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் யாழ். வரும் இக்குழு இங்கு இரண்டு நாள்கள் தங்கியிருந்து யாழ்ப்பாணத்தின் தொழில் முயற்சி விடயங்கள் மற்றும் வடக்கு - தெற்கு இடையேயான தொழில் நல்லுறவு முயற்சிகள் ஆகியவை குறித்து விரிவாக ஆராயும். (உ)

# தேர்தல் தொடர்பாக மனித உரிமை மீறல் மனு

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலின்போது மட்டக்களப்பு பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில இல்லாத பகுதியிலிருந்து வந்த மக்களை வாக்களிக்கவிடாமல் படையினர் தடுத்ததை ஆட்சேபித்து இரு மனித உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

# சிவசிதம்பரத்துக்கு வீடு அரசு வழங்குகின்றது

கொழும்பு,ஜன.8

கடந்த சனியன்று தமிழகத்திலிருந்து கொழும்பு திரும்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் கொழும்பில் தங்கியிருப்பதற்கு அரசாங்கம் வீடு ஒன்றை வழங்கியிருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின உயர்மட்ட குழு ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து விடுத்த கோரிக்கையை அடுத்து வீடு ஒன்றை சிவசிதம்பரத்துக்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு பிரதமர்



தளர்வுற்ற நிலையில் கொழும்பு திரும்பியிருக்கும் எம்.சிவசிதம்பரம்

உத்தரவிட்டதாகத் தெரிகின்றது.

"தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர்கள் என்னைத்தேடி வந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்கள். 'சமிட் பிளட்ஸில்' வீடு ஒன்றை உடன் வழங்குமாறு உத்தரவிட்டு அவர்களது கோரிக்கையை நிறைவேற்றினேன்." - என்று பிரதமர் ரணில் தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியதாகத் தெரியவந்தது.

கூட்டணியின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கும் எம்.சிவசிதம்பரம் இன்னும் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை என்பது தெரிந்ததே. (உ)

# மிருசுவில் அரச ஆஸ்பத்திரியை மீள இயக்குமாறு கோரிக்கை

மிருசுவில் அரசினர் மத்திய மருந்தகம் மற்றும் பிரசவ விடுதி ஆகியவற்றை மீள இயக்கவைக்குமாறு தென்மராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர்கள் கடிதங்களை அனுப்பி வருவதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சி கிழக்கில் கொடிகாமம், கச்சாய், மீசாலை, அல்லாரை, மிருசுவில், உசன், கெற்பெலி, விடத்தல்பளை பகுதிகளில் தற்சமயம் கணிசமான மக்கள் மீளக்குடியமர்ந்து வசிக்கின்றனர். இவர்கள் மருத்துவ சிகிச்சைகளுக்காக தொலைவில் உள்ள வரணி அல்லது மந்திகை வைத்தியசாலைக்கே செல்லவேண்டிய இக்கட்டான நிலையிலுள்ளனர்.

அகால வேளையில் பல தடைகளையும் தாண்டி பலத்த சிரமத்தின் மத்தியில் இவ்வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் காலதாமதமேற்பட்டு நோயாளிகள் இறந்த சந்தர்ப்பங்கள் பல தடவைகள் ஏற்பட்டதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

மிருசுவில் அரசினர் வைத்தியசாலை போதியளவு கட்டடவசதிகளைக் கொண்டிருப்பதும் -

இங்கு பணிபுரிய தென்மராட்சியைச் சேர்ந்த சுகாதார பகுதி ஊழியர்கள் பலர் விருப்பம் தெரிவித்துள்ளதும் - பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றன. (ஒ-15)

# மரவேலைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அரச இயந்திரசாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சி மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட பயிற்சிக்காலம் உடைய இந்தக் கற்கைநெறிக்கு இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் -

★ 14முதல் 30 வயதுக்குட்பட்டவராயும் -

★ 8ஆம் ஆண்டு சித்தியடைந்தவராயும் -

இருத்தல் அவசியம்.

எந்தப் பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ளோரும் இந்தக் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தின் முதல் ஆறு மாதங்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக ரூபா 30 உடன் பணிக்கான சம்பளத்தில் 80 வீத இலாபப் பணமும் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி 'பிரதேச செயலர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படியும் -

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மரவேலைப் பயிற்சி நெறி 2002 என்று குறிப்பிடும்படியும் -

பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ஒ)

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா கனகசபை

காரைநகரைச் சேர்ந்த நல்லம்மா கனகசபை 06.01.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கனகசபையின் அன்பு மனைவியும், Dr.முருகேசு, காலஞ்சென்ற தம்பியையா (இலங்கை வங்கி முகாமையாளர்) மற்றும் கணேசன் (இ.போ.ச.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, செல்லம்மா, தங்கம்மா மற்றும் தவமணியின் அன்புச் சகோதரியும் ராசமணி, நரகலிங்கம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் ஞானேஸ்வரி, சரோசா, தர்மகுலசிங்கம், அருளையா, சுந்தரலிங்கம், மனோன்மணி, அமிர்தலிங்கம், பரராஜசிங்கம், நகுலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அருளம்பலம், சரஸ்வதி, நாகம்மா, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தர்மலிங்கம், தனலட்சுமி, ராசலட்சுமி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அன்னபூரணி, சகுந்தலா, கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.01.2002) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகசபை தர்மகுலசிங்கம்
(மகன்)

*பழமுதிர்சோலை,*
*காரைநகர்.*

(96840)



பதினைந்து வயதுச் சிறுவன் சாள்ஸ் அமெரிக்க வங்கிக் கட்டடத்தில் மோதிய விமானத்தின் பாகங்கள் கட்டடத்தின் கீழே வீதியில் சிதறிக் கிடப்பதை முதலாவது படத்திலும் அதிகாரி ஒருவர் தடயங்களைச் சேகரிப்பதை இரண்டாவது படத்திலும் விமானம் மோதிய வங்கியின் ஏழாம், எட்டாம் மாடிக் கண்ணாடிகள் நொறுங்கி அந்த இடத்தில் துவாரம் ஏற்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### பின்லேடன் மீதான அனுதாபத்தின் வெளிப்பாடு:

# அமெரிக்க வங்கிக் கட்டடத்தை தகர்ப்பதே சிறுவனின் இலக்கு!

### அதிகாரிகள் வெளியிடும் திடுக்கிடும் தகவல்

நியூயோர்க்,ஜன.8

ஒஸாமா பின்லேடன் மீதான அனுதாபம் காரணமாகவே அமெரிக்க புளோரிடா மாநிலம் டம்பாவில் உள்ள அமெரிக்க வங்கிக் கட்டடம் மீது பதினைந்து வயதுச் சிறுவனான சாள்ஸ் பிஷப் விமானத்தை மோதி தற்கொலைத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் சாள்ஸ் எழுதிய கடிதம் ஒன்றை அவனது உடலத்தில் இருந்து தாம் கைப்பற்றியுள்ளதாக டம்பா நகர பொலீஸ் அதிகாரி பொனிஹேறால்டன் தெரிவித்தார். சாள்ஸின் கையெழுத்தில் சுமார் நான்கு பந்திகளில் அந்தக் கடிதம் அமைந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

"அதேநேரம் சாள்ஸுக்கு தீவிரவாத அமைப்புகளுடன் எந்தத் தொடர்புகளும் இருந்ததாக எம்மிடம் தகவல் இல்லை. ஆனால் சாள்ஸ் ஒரு விவகாரமான ஆள் என்றே எல்லாத் தகவல்களும் குறிப்பிடுகின்றன" - என்றார் பொனிஹேறால்டர்.

சாள்ஸின் இலக்கு அமெரிக்க வங்கிக் கட்டடம் அல்லது மக்டில் விமானப் படைத் தளமாக இருந்திருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.


"இந்த இளம் சிறுவனுக்கு மிகக் குறைந்தளவு நண்பர்களே இருக்கிறார்கள். தனிமையிலேயே கூடிய நேரத்தைச் செலவிடும் ஒரு பிரச்சினைக்கான நபராக அவன் இருந்துள்ளான்" - என்று அவர் மேலும் சொன்னார். 'ஈஸ்ட் லேக்' உயர் தர பாடசாலை மாணவனான சாள்ஸ் அவனது பெற்றோருக்கு ஒரே மகன்.(ம)





சாள்ஸ் பிஷப் நேற்று முன்தினம் அமெரிக்க வங்கிக் கட்டடத்தில் மோதிய விமானம் தொங்கிக் கொண்டிருப்பதையும் அதனை நகர மக்கள் பலர் பார்த்துக் கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## செயற்கைக் கருவிழி ஜப்பானில் கண்டுபிடிப்பு!



டோக்கியோ,ஜன.8

ஜப்பானிய விஞ்ஞானிகள் புதிய செயற்கைக் கருவிழி ஒன்றை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். உலகில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட கருவிழி இது.

இந்தப் புதிய கண்டுபிடிப்பு பார்வைக்குறைபாடுகளுடைய பெரும்பாலானோருக்கான சிகிச்சையில் பெரும் முன்னேற்றங்களைக் கொண்டுவரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர்கள் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

[illegible]ளையின் கருவில் இருந்து பிரித்தெடுக்கப்படும் சில கலங்களில் [illegible] இந்தப் புதிய செயற்கைக் கருவிழி உருவாக்கப்படுகின்றது.

[illegible]க்கியோ பல்கலைக்கழக விஞ்ஞானியான மகோடா அஸா ஹிமா [illegible]றித்துத் தெரிவித்ததாவது:-

[illegible]வளையின் கருவில் இருந்து சில கலங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. அவை விசேட திரவம் ஒன்றில் ஊறவைக்கப்படுகின்றது. பின்னர் வாற்பேத்தையின் இடது கண் அகற்றப்பட்டு புதிய கலங்கள் அதில் பதிய வைக்கப்படுகின்றன.

ஒரு வாரத்தில் செலுத்தப்பட்ட புதிய கலங்களில் இருந்து பார்வை நரம்புகள் உருவாகி அவை வாற்பேத்தையின் பார்வை நரம்புகளுடன் சேர்ந்துகொள்கின்றன. புதிய நரம்புகளை வாற்பேத்தையின் கலங்கள் நிராகரிக்கவில்லை.

இதே செய்முறையை பார்[illegible]யற்றவர்களுக்கும் பிறக்கும்போதே பார்வையின்றிப் பிறக்கும் [illegible]க்கும் செய்யமுடியும். இந்தச் சிகிச்சை முறை நிச்சயம் ப[illegible]கும் - என்றார்.

இந்தப் புதிய கருவிழியை மனிதர்களுக்குப் பொருத்துவது தொடர்பான ஆய்வுகளை டோக்கியோ பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

உலகின் ஏனைய விஞ்ஞானிகள் இந்தப் புதிய கண்டுபிடிப்புக் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். அதன் பின்பே இதன் வெற்றி குறித்துத் தெளிவாக முடிவு தெரியவரும். (ம)

## அல்கெய்டா தீவிரவாதிகள் 15 பேர் சிங்கப்பூரில் கைது

சிங்கப்பூர்சிற்றி,ஜன.8

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 15 பேரை சிங்கப்பூர் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்களது வீடுகள் மற்றும் அலுவலகங்களைச் சோதனையிட்டதில், அவர்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த பெரும் கட்டங்களின் புகைப்படங்கள், வீடியோ ஒளிநாடாக்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக சிங்கப்பூர் உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் ஆப்கானில் இருந்த அல்கெய்டா அமைப்பின் பயிற்சி முகாம்களில் குறுகிய காலப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### ஒப்பந்தம் கைச்சாத்து

காத்மண்டு,ஜன.8

சார்க் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் ஸ்திரநிலைக்கும் அபிவிருத்திக்கும் அச்சுறுத்தலாக இருந்து வரும் பயங்கரவாதத்தை ஒழிக்கவும் வறுமையை நீக்கவும் வழிவகுக்கும் காத்மண்டு பிரகடனத்தில் தெற்காசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

உலக அரங்கில்

பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்டுவதற்கு சகலவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை சார்க் நாடுகளின் தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். (ம-6-9)

## காஷ்மீர் தீவிரவாதிகள் மீதான நடவடிக்கைகளில் பாக். தீவிரம்

இந்தியக் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதியில் பிரிவினை கோரிப் போராடி வரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கையை பாகிஸ்தான் தீவிரப்படுத்தியுள்ளது.


கடந்த மாதம் இந்திய நாடாளுமன்றத் கட்டடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதக் குழுக்கள் என்று இந்தியாவால் குற்றஞ்சாட்டப்படும் லக்ஸர் - இ - தொய்பா, ஜெய்ஸி மொஹமட் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களே கூடுதலாக கைதுசெய்யப்படுகின்றார்கள்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பஞ்சாப் மாநிலத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 40 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

"கடந்த இருவாரங்களில் மட்டும் தமது அமைப்பைச் சேர்ந்த 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று ஜெய்ஸி மொஹமட் அமைப்பின் தளபதி ஒருவர் கூறியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை அங்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் வரவேற்றுள்ளார்.

ஆனால் தீவிரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் போதியதாக இல்லை என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது. (ம)



## அரபாத் ஒரு பயங்கரவாதி: இஸ்ரேல் பிரதமர் ஆவேசம்

ஜெருசலேம்,ஜன.8

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ஒரு பயங்கரவாதி; சர்வதேச பயங்கரவாதத்தின் முக்கிய சூத்திரதாரியும் அவரே - என்று ஆவேசத்துடன் குற்றஞ்சாட்டியுள்ளார் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன்.

இஸ்ரேலியக் கடற்படையினரால் செங்கடலில் வழிமறிக்கப்பட்ட ஆயுதக் கப்பலைச் சென்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளரிடையே பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆயுதக் கப்பல் பலஸ்தீனர்களுக்கு 50 தொன் நிறையுடைய ஆயுதம் ஏற்றி வந்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டுகின்றது. இந்தக் குற்றச்சாட்டை பலஸ்தீன அதிகார சபை மறுத்துள்ளது.

எனினும் இந்தக் கப்பல் ஈரானிலிருந்து அங்கு தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு பலஸ்தீனம் நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும் - அந்தக் கப்பலின் கப்டன் பலஸ்தீன கடற்படைப் பொலீஸ் கேணல் எனவும் - இஸ்ரேல் தெரிவிக்கின்றது.

ஆனால் ஈரானும் பலஸ்தீனமும் இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்துள்ளன.



செங்கடலில் இஸ்ரேலியக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட கப்பலும் அதில் இருந்த ஆயுதங்களும்.



ஆயுதக்கப்பலை பார்வையிட்டுத் திரும்பும் ஷெரோன்

இந்த சர்சைக்குரிய கப்பலை இஸ்ரேல் பிரதமர் நேரில் சென்று பார்வையிட்டார். அவர் செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது:-

"பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தனிப்பட்ட ரீதியில் இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான கட்டளையை வழங்கி இருந்தார். அரபாத்தும் அவரது பலஸ்தீன அதிகாரசபையினருமே சர்வதேச பயங்கரவாதத்தில் முக்கிய பணியாற்றுகின்றனர். ஈரானில் இந்தப் பயங்கரவாதம் வழி நடத்தப்படுகின்றது" - என்றார். (ம)

## இந்திய, பாக். தலைவர்களுடன் பிரிட்டிஷ் பிரதமர் பேச்சு!

இஸ்லாமாபாத்,ஜன.8

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று அதிபர் பர்வேஸ் முஷாரப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



புதுடில்லியில் வாஜபாயுடன் பிளயர்

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை காலை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்துப் பேசிய பின்னர் பிரதமர் பிளயர் ஞாயிறு இரவு பாகிஸ்தானுக்குப் பயணமானார்.

நேற்றுக் காலை அவர் அதிபர் முஷாரப்பைச் சந்தித்துப் பேசினார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தணிப்பது தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெற்காசிய நாடுகளுக்கான தனது ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதியாக பிரிட்டிஷ் பிரதமர் இஸ்லாமாபாத் வந்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தணிப்பதே அவரது தெற்காசிய விஜயத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த விடயத்தில் பிளயரின் பயணம் முழு வெற்றியளிக்கவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

முறுகல் நிலையைத் தணிக்கும் முயற்சியாக, தீவிரவாதத்தை எதிர்த்து செயற்படும் விடயத்தில் பாகிஸ்தானும் இந்தியாவும் இணைந்து செயற்படலாம் என்று இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரிடம் யோசனை தெரிவித்திருந்தார். எனினும் இந்த யோசனை குறித்து பிளயர் முஷாரப்பிடம் விவரித்தபோதும் அவர் அதனை நிராகரித்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# யாழ்ப்பாணம் உட்பட 6 மாவட்டங்களில் பொங்கல் விழாக்களை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.8

இந்து சமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் உட்பட 6 மாவட்டங்களில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை தைப்பொங்கல் விழாக்கள் நடத்தப்படவுள்ளன. ஐக்கிய தேசிய முன்னணியின் நூறுநாள் துரித செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் முகமாக பொங்கல் விழா ஏற்பாடு செயயப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மாவட்டச் செயலகங்கள், இந்து ஆலயங்கள் ஆகியன ஒன்றிணைந்து இந்த விழாவை ஒழுங்கு செய்துள்ளன.

இதன்படி யாழ்.மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 14ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குப் பின்னால் உள்ள துர்க்கா மணி மண்டபத்திலும் -

இரத்தினபுரி மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 19ஆம் திகதி பலாங்கொடை ஸ்ரீ முத்துமாரியம்மன் கலாசார மண்டபத்திலும் -

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 20ஆம் திகதி ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்திலும்-

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 26ஆம் திகதி கல்லடி சித்திவிநாயகர் ஆலய இந்து கலாசார மண்டபத்திலும் -

புத்தளம் மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 27ஆம் திகதி உடப்பு பெருமாள் ஆலயத்திலும் -

கொழும்பு மாவட்டத்துக்கான விழா எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன மண்டபத்திலும் - நடைபெறவுள்ளன.

பொங்கல் விழாவின் போது காலை 7.00 மணிக்கு பொங்கல், 9 மணிக்கு விசேட பூசை, 9.30 மணிமுதல் 11.30 மணிவரை பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, [illegible]டுகுடு, கயிறு இழுத்தல், முட்டியுடைத்தல், போர்த்தேங்காய் அடித்தல், மல்யுத்தம், வாள்சண்டை, மாட்டுவண்டிச் சவாரி, தோணி ஓட்டம் என்பன மாவட்டங்களின் கலாசாரப் பின்னணிக்கு ஏற்றவகையில் நடைபெறும். பிற்பகல் 3 மணி முதல் 6.30 மணி வரை கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

பொங்கல் விழாக்களில் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-7)

## சஞ்சீவி வாசகர் கருத்து

### காலம் தாழ்த்தாமல் வருக!

ஈழ மண்ணில் மீண்டும் புதுப் பொலிவுடன் "சஞ்சீவி" வெளிவரப் போகின்றான் என்ற செய்தி 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்தது முதல் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளேன். இந்தச் செய்தி வரமுன்னரே - அதாவது நவராத்திரியுடன் - அவன் வருவான் என எதிர்பார்த்தேன். எனினும் அவன் வரவில்லை.

ஆனால் காலம் தாழ்த்தித் தமிழர் திருநாளாம் தைப்பொங்களுடனாவது அழகிய மூவர்ணத்தில் அவன் வெளிவரவேண்டும் என மிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

முன்புபோல் தரமானதாகவும், தன் நிலை கொள்கை தவறாமலும், நன்றாகவும், மேலும் பல விடயங்களைத் தாங்கியும் அவன் வெளிவர வேண்டும். இடையில் நின்றுபோன தொடர் கதைகளையும், முன் கதைச் சுருக்கத்துடன் வெளியிடவேண்டும். சிறுவர்களுக்கான தரமான ஆக்கங்களையும் சிறுவர் சித்திரத் தொடர் கதைகளையும் வெளியிடுவீர்கள் என எதிர்பார்கிறேன். அத்துடன் "மௌன மொழி", "கவிதை முற்றம்" முதலிய அம்சங்களையும் தாங்கி "சஞ்சீவி" வெளிவரவேண்டும் என விரும்புகிறேன்.

வாசகர்களின் எதிர்பார்ப்பை மீண்டும் ஏமாற்றாமல், தடையின்றித் தொடர்ந்து வெளிவர "சஞ்சீவி"க்கு என் நல்வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகுக.

*கந்தர்மடம்.* த.குகானந்தா.

### 'சுடர் ஒளி' போல் வர்ணத்தில் வருக!

"சஞ்சீவி"யே உன்னை வரவேற்க இளைய வாசகர்களின் உள்ளங்கள ஆயத்தமாய் உள்ளன. நீ வலம் வரும்போது உன் சகோதர "சுடர் ஒளி" போல் வர்ண அச்சுடனும் "மௌன மொழி", "கவிதை முற்றம்", "அங்கிகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒரு விதம்", "என் பிரிய பூமிக்காக" என்ற அம்சங்களுடன் வெளிவரவேண்டும் என உன்னை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

*மந்துவில் கிழக்கு.* சி.இன்பராஜ்.

### புத்தாண்டில் புதுமெருகுடன் வருக!

"சஞ்சீவி" மீண்டும் புதுப்பொலிவோடு எம் நெஞ்சம் மகிழ்விக்க வருகின்றான் என்ற செய்தியை அறிந்தவுடனேயே என்னுள் சந்தோஷத் தென்றல் வீசத் தொடங்கிவிட்டது.

முன்பிருந்த "மௌனமொழி", "கவிதை முற்றம்", "வித்துவான் பதில்", "சிறுகதைகள்", "சிறுவர் சுடர்" போன்ற அனைத்து அம்சங்களோடு சஞ்சீவி இன்னும் புதுமெருகோடு, புதுமலராய் புத்தாண்டில் புன்னகை பூத்துவரவேண்டும்.

அஞ்சாத "உதயனி"ன் அயராத சேவைபோல் "சஞ்சீவி"யும் என்றும் சிரஞ்சீவியாக வெளிவரவேண்டும், வெகுவிரைவில் வரவேண்டும் என்று பணிவுடன், நேச வாசகன் என்ற துணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*வதிரி.* த.அஜந்தகுமார்.

### தட்டிக்கேட்க "அதிரடி அரங்கு" தேவை

அன்பான "சஞ்சீவி"யே நீ மீண்டும் வெளிவரப்போவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த பல்லாயிரக்கணக்காண வாசகநேயர்களில் நானும் ஒருவன்.

அந்தவகையில், நீ ஆரம்பத்தில் சுமந்துவந்த ஆக்கங்கள் அனைத்தும் அருமை. அதிலும் "மின்னல்" வழங்கிய அதிரடி அரங்கு மிகவும் நல்லது. எனவே வரவிருக்கும் "சஞ்சீவி"யில் முறைகேடான விரைங்களை முரட்டுத் துணிவுடன் சுட்டிக் காட்டிய "மின்னலின்" "அதிரடி அரங்கு"ப் பகுதி நிச்சயம் இடம்பெறவேண்டும்.

மேலும் - "வித்துவான் பதில்கள்" விரசம் குறைந்தவையாக வெளிவருவதை உறுதிசெய்துகொள்ளவும். அத்துடன் "கவிதை முற்றம்", "சிறுகதைகள்", போன்றனவற்றுடன் "மருத்துவவிளக்கம்", "தகவல் தொழில்நுட்பம்" சார்பான கருத்துக்கள், "கனனிக் கல்வி" போன்ற அம்சங்களுடன் "விளையாட்டுச் செய்திகள்" போன்றவற்றையும் இணைத்து 'சஞ்சீவி' வெளிவரவேண்டும்.

*பண்ணாகம்.* இ.பரணீதரன்.

### "சினிமா" வேண்டவே வேண்டாம்

மீண்டும் "சஞ்சீவி" வெளிவரப்போகின்றான் என்பது மிகவும் தித்திப்பான செய்தியாகவுள்ளது.

பத்து வருடங்களுக்கு மேலாக, அவலங்கள் நிறைந்த இந்த மண்ணிலே அறிவொளி பரப்பும் அரிய சஞ்சிகையாக "சஞ்சீவி" விளங்கினான். இடையிடையே "சஞ்சீவி" வெளிவராமல் தடைப்பட்ட போதெல்லாம் வாசக நெஞ்சங்கள் ஏங்கிநின்று, அதன் வரவுக்காகக் காத்து நின்றதை மறக்கமுடியாது.

'சஞ்சீவி' பல எழுத்தாளர்களை உருவாக்கியது. 1998 ஆம் ஆண்டளவில் சஞ்சீவியில் பிரசுரமான மணியான சிறுகதைகளைப் பார்த்தபோது, எனக்கும் சிறுகதை எழுதும் ஆவல் ஏற்பட்டது.

1989 ஜூலை முதலாம் திகதி எனது முதல் சிறுகதையான "ஜனனம்" என்ற கதையைப் பிரசுரித்து அதன் மூலம் எனக்குத் தன்னம்பிக்கையூட்டியவன் சஞ்சீவியே. "சஞ்சீவி", "தினகரன்", "வீரகேசரி" முதலிய பத்திரிகைகளில் இதுவரை நான் எழுதிய 30 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவை அனைத்துக்கும் அத்திவாரமிட்டவன் "சஞ்சீவி"யே. இதனை நன்றியுடன் நினைவுகூர்வதில் நான் என்றும் பின்னிற்கமாட்டேன்.

"சஞ்சீவி" இதுவரை காலமும் தரமான - பண்பான - சமுதாயத்துக்கு நல்வழிகாட்டும் பத்திரிகையாக விளங்கினான். அவன் தொடர்ந்தும் தனது நிலையிலிருந்து சிறிதும் வழுவாமல் வருவான் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

"சினிமாப் பகுதி" என்ற பக்கம் இல்லாமலேயே "சஞ்சீவி" வாசகர்களால பெரிதும் வரவேற்கப்பட்டான். அத்தகைய பெருமையை அவன் எப்பொழுதும் பேணவேண்டும்.

சில பத்திரிகைகள் சினிமாவில் வரும் தரக்குறைவான படங்களை - செய்திகளைப் பிரசுரித்து, கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டுவனவாக உள்ளன. எனவே சினிமாப் பகுதி அவசியமற்றது.

எனவே சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், மௌன மொழி, சொற்சிலம்பம் முதலான சிறப்பம்சங்களோடு "சஞ்சீவி" அறிவொளி பரப்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*கோட்டைக்காடு.* எம்.இந்திராணி.

## கால்நடைகள் திணைக்கள அதிகாரி பதில்கடமை

யாழ்ப்பாணம்,ஜன.8

வடக்கு - கிழக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.நவரட்ணம் வெளிநாடு சென்றிருப்பதால் பதில் கடமையினை தென்பகுதி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவலிங்கம் பொறுப்பேற்றுள்ளார்.(ஐ-180)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஆண்டு (2001) பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களில் இவ்வருடமும் தொடர்ந்து கடமையாற்ற விரும்புவோர் வலய அலுவலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று பாடசாலை அதிபருடாக விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## மிதிவெடிகளை அகற்றுமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஜன.8

சாவகச்சேரி இந்துக் கல்லூரியை மீண்டும் இயக்குவதற்கு வசதியாக கல்லூரிச் சுற்றாடலில் உள்ள மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா யாழ்.அரசஅதிபரைக் கோரியுள்ளார்.

சுற்றாடலில் மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டதும் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-117)

## மீனவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் உள்ள மீனவர்களுக்கு உதவி வழங்கவென 10 லட்சம் ரூபா நிதியினை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம் வழங்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களின் கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக 10லட்சம் ரூபாவை வழங்கி உதவவுள்ளதாக ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## அரியாலையில் பொதுச்சந்தை அமைக்க நடவடிக்கை

அரியாலைப் பகுதி மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு அங்கு பொதுச்சந்தை ஒன்றை அமைப்பதற்கு யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் சந்தையை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகும் என்றும் மாநகரசபையின் பிரதி மேயர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

முன்பு அங்கு இயங்கி வந்த பொதுச்சந்தை கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்ததையடுத்து அதனைப் புதிதாக அமைப்பதற்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் 2000ஆம் ஆண்டு மே மாதம் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து அத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

தற்பொழுது தமது பகுதியில் பொதுச் சந்தையை அமைத்துத்தருமாறு அரியாலை அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாநகர சபையின் மேயருக்கும், ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தது. அத்துடன் மக்கள் படிப்படியாக அங்கு மீளக் குடியேறி வருவதால் சேதமடைந்த வீதிகளையும் செப்பனிட்டுத் தருமாறு அக்கடிதத்தில் கேட்டிருந்தது.

இதற்கமையத் தற்பொழுது புங்கன் குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் பொதுச் சந்தையும், இறைச்சிக் கடையும் அமைக்கப்படவுள்ளது. (க-10)

## தனியாரின் ஏகபோகத்தைக் கட்டுப்படுத்த

## அரிந்த மரங்கள், சலாகைகள் கப்பலில் எடுத்துவரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.8

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய அலுவலகத்தினால் யாழ்மாவட்ட மக்களின் கட்டட வேலைகளுக்குத் தேவையான அரிந்தமரங்களும், சலாகைகளும் தென்பகுதியில் இருந்து கப்பல் மூலம் விரைவில எடுத்துவரப்படவுள்ளன.

இங்குள்ள தனியார் மர வியாபாரிகளின் ஏகபோக உரிமையைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் தீராந்திகள், பலகைகள் மற்றும் மரச் சலாகைகளுக்கு இங்கு அதிக கிராக்கி இருப்பதாலும் இங்குள்ள வியாபாரிகள் அதிக விலையில் அவற்றை விற்பதாலும் இவை எடுத்துவரப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள மக்கள் பாலை, முதிரை மற்றும் யாவறணை மரங்களையே பெரிதும் விரும்புகின்றார்கள். இவை தற்பொழுது கிடைப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. அதனால் தென்பகுதியில் இருந்து மலைவேம்பு மரத்தின் பலகைகள், தீராந்திகளே எடுத்துவரப்படவுள்ளன.

நல்ல தரம் கொண்ட இவற்றை இங்குள்ள மக்கள் பயன்படுத்துவதன் மூலம் புதிய வர்க்க மொன்றை இங்கு அறிமுகப்படுத்தும் நிலையும் தோன்றவுள்ளது.

இதேவேளை -

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 1000 சதுர அடி பலகைகளும், 6ஆயிரத்து 600 அடி நீளம் கொண்ட தீராந்திகளும் எடுத்துவரப்பட்டன. தற்பொழுது அவற்றின் மிகுதியாக 60 சதுர அடி பலகைகளும் ஆயிரத்து 800 அடி நீளம் கொண்ட தீராந்திகளும் உள்ளன என்றும் -

தேவைப்படுவோர் நல்லூர், சட்டநாதர் வீதியில் உள்ள மரக் கூட்டுத்தாபனத்தின் மரக்கன்றுகள் உற்பத்தி மையத்துடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## எரிபொருள் நிலையங்கள், ப.நோ.கூ.சங்கங்களில்

## மண்ணெண்ணெய் விநியோகம் நடந்தாலும் தனியார் கடைகளில் விலை குறையவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் உள்ள குறிப்பிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுக்கு தலா 5 லீற்றர் வீதம் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டுவரும் அதேவேளையில் தனியார் கடைகளில் அதன் விலை குறையவில்லை.

தனியார் கடைகளில் ஒரு லீற்றர் மண்எண்ணெய் 60 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனினும் ப.நோ.கூ.சங்கக் கடைகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கட்டுப்பாட்டு விலைக்கே மண்எண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

இதனால் மண்எண்ணெய் பெறுவதற்கு தற்போதும் கூட பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கே படையெடுத்து வருகின்றனர்.

இதேவேளை -

குடாநாட்டில் தனியார் விற்பனை நிலையங்களில் பெற்றோல் 90 ரூபா தொடக்கம் 110 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேசமயம எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் தற்போது பெற்றோல் விநியோகிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (க-6)



**வலிகாமம் இடப்பெயர்வுக்குப் பின்னர் இதுவரை இயங்காமல் இருக்கும் கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தை மீள இயக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அண்மையில் பாடசாலை அதிபர்தலைமையிலான குழு ஒன்று பாடசாலைக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டது.**

**அக்குழுவில் இடம்பெற்ற அதிபர் எம்.ஞானப்பிரகாசம், வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.வன்னியசிங்கம், பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு.எஸ்.யோகரட்ணம் அடிகள், யாழ். கோட்டக்கல்வி அதிகாரி ஆ.இராஜகோபால் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்,பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம். (ஐ-51)**

உதயன்

# இணைந்து செயற்பட இருவரும் தயாரா?

"விடுதலைப் புலிகளுடன் பேசி, அமைதித் தீர்வைக்காண முயற்சிப்பதாகக் கூறும் ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய அரசு, அது குறித்து எனக்குப் போதிய விளக்கம் எதனையும் தரவில்லை. என்றாலும் கடந்த காலத்தில் - அப்போதைய - எதிர்க் கட்சிகள் நடந்துகொண்டது போல நாம் நடக்க மாட்டோம்; சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கமாட்டோம்."

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. காத்மண்டுவில் 'சார்க்' மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், அங்குள்ள இலங்கைத் தூதுவரின் இல்லத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே புதிய அரசுமீது இவ்வாறு குறைகூறியிருக்கின்றார் அவர்.

எனினும் -

'சார்க்' மாநாட்டில் உரையாற்றிய சமயம் ஒரு நாட்டின் தலைவருக்குரிய கனவான்தனத்தோடு - தனது நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசை, சர்வதேச மாநாட்டில் வைத்து விமர்சிப்பதைத் தவிர்த்து - "இலங்கையில் புதிய அரசு மேற்கொண்டுவரும் அமைதி முயற்சிகளுக்குத் தொடர்ந்து தலைமைத்துவம் கொடுத்து வழிகாட்டுவேன்" - என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

பின்னர் தனியாக நடந்த செய்தியாளர் மாநாட்டில் விடுக்கப்பட்ட கேள்விக்கணைகளுக்குப் பதிலளித்த சமயமே புதிய அரசின் போக்குக் குறித்து அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக அனுசரணைப் பணியை நோர்வே அரசு வழங்குகின்றது. இவ்விடயம் தொடர்பாக நோர்வே எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி குமாரதுங்கவால் நியமிக்கப்படுகின்ற எதிர்க்கட்சிப் பிரமுகருக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிக்கும்படி நோர்வேப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார்.

ஆனால், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகத் தனது சார்பில் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு புதிய அரசு தன்னிடம் கோரிக்கை எதனையும் விடுவிக்கவில்லை என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

இந்தத் தகவல் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இன்னும் இணக்கமான ஒரு நிலைமை ஏற்படவில்லை என்பதையே காட்டுகின்றது.

தன்னுடைய அரசு ஆட்சியில் இருந்தபோது, அந்த அரசு எடுத்த சமாதான முயற்சிகளுக்கு அப்போதைய எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி ஆதரவு வழங்க மறுத்தது; அதனை எதிர்த்துக் குழப்பியது என்கின்றார் ஜனாதிபதி.

எனினும், தற்போதைய எதிர்க் கட்சியும் தானும் அப்படி நடந்துகொள்ளப்போவதில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

ஆனால் -

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த (இப்போதைய பிரதமரான) ரணில் விக்கிரமசிங்கவோ, சந்திரிகாவின் அரசு அமைதித் தீர்வுக்காக எடுத்த முயற்சிகள் குறித்துத் தனக்கு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அதனால் தனக்கு ஏதும் செய்ய முடியவில்லை என்றும் அப்போதிருந்தே குற்றம் சுமத்திவந்தார்.

இப்போது காட்சி மாறிவிட்டது. ரணில் பிரதமர். புதிய அரசின் கடிவாளம் அவர் கையில். ஜனாதிபதி குமாரதுங்கவின் அணி எதிர்க்கட்சியில். அவர் வெறும் ஜனாதிபதி மட்டுமே.

அதனால் இருவரும் பழைய நிலைக்குத் தலைகீழான நிலையில் இருந்துகொண்டு குற்றச்சாட்டுகளை மாற்றிக் கூறுகின்றார்கள்.

இப்படி குற்றச்சாட்டுகளை மாறி மாறிச் சுமத்துவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை. சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து, தமிழர்களின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றை முன்வைத்தால்தான் நாட்டில் அமைதி கிட்டும்; சமாதானப்புறா பறக்கும்.

அதைவிடுத்து - குறுகிய அரசியல் லாபங்களுக்காக - முன்னைய தென்பகுதித் தலைவர்களின் வழியை அடியொற்றி இவர்களும் நடந்துகொள்வார்களேயானால் போரின் பேரழிவிலிருந்து நாட்டை மீட்க முடியாமற்போய்விடும்.

எனவே அமைதித் தீர்வை இணைந்து முன்னெடுக்க பிரதமரும் ஜனாதிபதியும் திட சங்கற்பம் பூண்டால்தான் நாட்டில் அமைதி ஏற்படும்; சமாதானம் கிட்டும்.

அதை அவர்கள் செய்வார்களா?

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு 60 கோடி ரூபா செலவாகும்

கொழும்பு,ஜன.8

உள்ளூராட்சித் தேர்தலுக்கு 60 கோடி ரூபா செலவாகும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலுக்கும் 60 கோடி ரூபாவே செலவு செய்யப்பட்டது.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தல்கள் மாநகரசபைகள், பட்டினசபைகள் மற்றும் 311 பிரதேச சபைகளுக்கு நடைபெறவுள்ளதால் தேர்தல் திணைக்களம் பெருமெடுப்பில் பணியாற்றவேண்டியுள்ளது எனத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான படிவங்களைத் தயாரித்தல், தபால் உறைகளைத் தயாரித்தல், வாக்களிப்பு நிலையத்தில் பயன்படுத்தும் அறிவிப்பு விளம்பரங்களைத் தயாரித்தல் ஆகிய பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஐ)

# நாட்டு நடப்பு

## நீதிமன்றில் பெண்மணிகள்

கையில் குழந்தையொன்றைக் காவி
கனகம்மா காத்திருக்கு வாங்கில்
பையில் மதிய உணவுதனைக் கொண்டு
கண்ணகி ஏறுகிறாள் கூண்டில்
வயிற்றில் மகவினையே தாங்கி
வதனா இருக்கிறாள் வாடி
வயதில் முதிர்ந்தவொரு பாட்டி
வருகின்றாள் கைப்பொல்லு ஊன்டி
கையில் பல்லாயிரம் கொண்டு
கணக்குப் பார்க்கிறார் கூடி
மூவாயிரம் தெண்டம் அடித்தாராம்
முழுப்போத்தல் கசிப்பிருந்த குற்றம்
பத்தாயிரம் தெண்டமடித் தாராம்
பகிர்ந்து விற்றதுவே குற்றம்
வயிறாரக் குடித்து விற்றமுத்தர்
வருந்துகிறார் மூன்றுமாதச் சிறையில்
ஆயிரமாயிரமாய் தெண்டம்
அரைக்கோடி சேர்ந்ததாம் ஓர் ஆண்டு
ஓயாது கசிப்பதனை காய்ச்சி
உருக்குலைத்தார் பெண்ணிவர் நாட்டை
மாயாதோ கசிப்பிந்த நாட்டில்
மக்கள் துயர் தீராதோ மண்ணில்.

*- விகடகவி.*

# வியாழனன்று கப்பல் மூலம் தபாற்பொதி அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் பொதிகள் எதிர்வரும் வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இங்கிருந்து எடுத்துச்செல்லப்படவுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

வெளியிடங்களுக்கு தபால்களை அனுப்புவோர் நாளை புதன்கிழமை காலைக்கு முன்னர் தபாலகங்களில் அவற்றை ஒப்படைக்குமாறும் அவர் கேட்டிருக்கிறார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் செஞ்சிலுவைக் கப்பல் மூலம் தபாற்பொதிகள் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-180)

## இரு பாடசாலைகள் பழைய இடங்களில் மீண்டும் இயங்கும்

தென்மராட்சி,ஜன.8

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியவை நாளை புதன்கிழமை தொடக்கம் சொந்த இடங்களில் மீள இயங்கவுள்ளன.

இப்பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது வேறு பாடசாலைகளுக்குத் தற்காலிக இடமாற்றம் பெற்று இணைந்துள்ள ஆசிரியர்கள் உடனடியாகத் தமது பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-117)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.8

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 8.30 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சிவலிங்கராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (க)

☆ ☆ ☆

தென் புலோலி புற்றளை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு கடந்த 20ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதி 'வள்ளி திருமணம்' இடம்பெறுவதுடன் கந்தபுராணப் படிப்பு நிறைவுறும். (கு-173)

☆ ☆ ☆

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் (வடலி அம்மன்) நாளை புதன்கிழமை காலை 7 மணிமுதல் சிவத்திரு. சண்முகவடிவேல் ஓதுவார் தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (கு-152)



யாழ்.மாவட்டத்தில் சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

சிறந்த பண்ணையாளர் ஒருவருக்கு யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் பரிசு வழங்குகிறார்.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.சின்னத்துரை, யாழ்.மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் எஸ்.சிவயோகநாதன் ஆகியோரும் கால்நடை வைத்திய அதிகாரிகளும் மேடையில் அமர்ந்துள்ளனர். (ஐ-180)

## குடத்தனை, மணற்காட்டுப் பகுதியில்

# அத்துமீறி மண் அகழ்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு!

வடமராட்சி கிழக்கு,ஜன.8

குடத்தனை, மணற்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து எடுக்கும் விவகாரத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்வது குறித்து குடத்தனை சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் ஆலோசித்துவருகிறது.

குடத்தனை, மணற்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வந்தமைக்கு எதிராக அப்பகுதி மக்கள் அண்மையில் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டமை தெரிந்ததே. அதனையடுத்து அப்பகுதியிலிருந்து மணல் அகழ்ந்தெடுக்கும் நடவடிக்கை கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் இவ்விடயத்தில் அரசியல் மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் இருந்து தலையீடுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதனால், மணல் அகழ்தல் விடயத்தை நீதிமன்றம் கொண்டுசென்று நீதியினைப் பெற்றுக்கொள்ள சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி வருவதாக அந்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

1971ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில், முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம் என்ற பிரகடனத்தின் கீழ் நாகர்கோவில் என்னும் கிராமத்தின தெற்கு எல்லையில் இருந்தோ கற்கோவளம் வரையுள்ள கடற்கரையில் இருந்தோ அல்லது அப்பிரதேசத்திலிருந்தோ மணல், முருகைக் கல்லோ ஏனைய இயற்கை வள்ங்களோ எடுத்துச்செல்லப்படக்கூடாது எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையினால் மணல் அகழ்ந்தெடுக்கும் அத்துமீறல் விடயத்தை நீதிமன்றம் கொண்டுசெல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை -

குடத்தனை, மணற்காட்டுப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்தல், சவுக்கு மரம் வெட்டுதல், கண்டல் காடுகள் அழித்தல் ஆகிய நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அப்பகுதி மக்கள் சூழல் பாதுகாப்புச் சங்கம் ஒன்றினை ஆரம்பித்திருப்பதாக அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-182-173)

# பின்தங்கிய பகுதியாக இனங்காணப்பட்ட ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமம்!

## தீர்வைப் பெற்றுத்தர குழு நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.8

ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமம் பின்தங்கிய கிராமமாக இனங்காணப்பட்டுள்ளது.

யாழ்.மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்ட செயற்றிட்ட முகாம் ஒன்றின் மூலம் இது தெரியவந்துள்ளது.

மருத்துவபீட மாணவர்கள் சம்பந்தப்பட்ட பகுதிக்கான பிரதேச செயலர், கிராம அலுவலர், சுகாதாரப் பரிசோதகர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் பட்டினிக்கெதிரான நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் முதலியவற்றின் பிரதிநிதிகள் இந்த செயற்றிட்ட முகாமில் கலந்துகொண்டனர்.

இந்த செயற்றிட்ட முகாமின் போது இனங்காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

☆ பெரும்பாலானோரின் மண் வீடுகள் முற்றாகச் சேதமடைந்த நிலையில் உள்ளன. ஓலைகளால் வேயப்பட்ட கூரைகள் சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

☆ பெரும்பாலான மக்கள் மலசலகூட வசதியின்றி சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக இப்பகுதி மக்கள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு, வயல்வெளிகளைப் பயன்படுத்திவருகின்றனர்.

☆ விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் அநாதைச் சிறுவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் இங்கு அதிகமாகக் காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட விதவைகள் எதுவித வேலைவாய்ப்புமின்றி அல்லற்படுகின்றனர்.

☆ பாடசாலைக்குச் செல்லாத சிறுவர், சிறுமியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது. பெரும் எண்ணிக்கையான சிறார்கள் பாடசாலை நேரத்தில் வேலைக்குச் செல்பவர்களாக உள்ளனர்.

☆ ஒரு சில குடிநீர்க் கிணறுகளையே இங்குள்ள மக்கள் பயன்படுத்திவருகின்றனர். இந்தக் கிணறுகளும் சுகாதாரத்துக்கு ஏற்றவகையில் அமைக்கப்படவில்லை.

மேற்படி கிராமத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க பொது நிறுவனங்கள் பல முன்வந்துள்ளன என்றும் -

கிராம அபிவிருத்திக்கான உதவிகளை ஒழுங்குபடுத்துவதற்கென 5 பேர் கொண்டகுழு ஒன்றும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும் -

மருத்துவபீட மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## உதயவாக்கு

பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ எதிர்பார்க்கின்றாயோ அதை முதலில் நீ அவர்களுக்குச் செய்!

## நாளை

மார்கழி 25
புதன்கிழமை
(09-01-2002)
திதி : ஏகாதசி
முன் இரவு 7.49 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 12.59 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 05.02 - 06.32
ராகுகாலம் : 12.32 - 2.02
(பழைய நேரப்படி)

# பி.பி.ஸியின் தமிழ், சிங்கள சேவைகள் மீண்டும் இலங்கை வானொலியில் அஞ்சல்

கொழும்பு,ஜன.8

பி.பி.ஸி. உலக சேவையின் தமிழ், சிங்கள நிகழ்ச்சிகளை மீண்டும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்புவதற்கு அரசாங்கம் அனுமதிவழங்கியுள்ளது.

பி.பி.ஸி. சிங்கள சேவையின் பிரதம தயாரிப்பாளர் பிரியத் லியனகே கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அலரிமாளிகையில் சந்தித்து நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பி.பி.ஸி. நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்பட்டபோதிலும் பின்னர் அதுநிறுத்தப்பட்டது.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசய' நிகழ்சியை இரவு 9.15 மணிக்கும், தமிழச் சேவையான 'தமிழ ஓசை' நிகழ்சியை இரவு 9.45மணிக்கும் இந்நாட்டு மக்கள் இலங்கை வானொலியில் கேட்பதற்கு விரைவில் வாய்ப்பு ஏற்படவுள்ளது. (ஐ)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்

# நடன பாடத்துக்குத் தோற்றிய 14 பேரின் விடைத்தாள்கள் மறைவு!

கொழும்பு,ஜன.8

இறுதியாக நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் சில்ரது விடைத்தாள்கள் தொலைந்த காரணத்தால் இறுதி நேரத்தில் அவர்களுக்கு பொய்யான புள்ளிகள் வழங்கப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தால் அவர்களுக்கான பெறுபேறுகள் அனுப்பப்பட்டன. 'திவயின' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தொலைந்துபோன விடைத்தாள்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை பரீட்சைத் திணைகளத்தால் கண்டறிய முடியவில்லை எனத் தெரியவருகிறது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் நடன பாடத்திற்கு சிங்கள மொழி மூலம் தோற்றிய 14 பேரின் விடைத்தாள்கள் அடங்கிய பொதியே இவ்வாறு தொலைந்துவிட்டது. இரத்தினபுரி பகுதி பரீட்சை மண்டபம் ஒன்றில் பரீட்சை எழுதியோரின் பொதியே தொலைந்துள்ளது.

கணனி மூலம் பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டபோதே அந்தப் 14 பேரின் புள்ளிகள் கிடைக்காதது கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும இறுதியில் அந்த விடைத்தாள்களுக்கு (தோற்றியவர்களுக்கு) பொய்யான புள்ளிகளை வழங்குமாறு மேலிடத்திலிருந்து பணிப்புரை வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

- இவ்வாறு 'திவயின' செயதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பணிகளை பன்முகப்படுத்த முடிவு

கொழும்பு,ஜன.8

ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுப் பணிகளை அடுத்த மாத இறுதிக்குள் பன்முகப்படுத்துவது என தொழில வேலைவாய்ப்பு அமைச்சர் மஹிந்த அமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முதற்கட்டப் பணிகள் களுத்துறை, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுகள் கொழும்புலுள்ள தொழில் திணைக்களத்தினாலேயே வழங்கப்பட்டு வருகின்றன. தொலை தூரங்களில் வசிப்பவர்களின் நேரத்தையும் பணத்தையும் சேமிப்பதே புதிய நடைமுறையின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களை அடுத்து ஏனைய மாவட்டங்களுக்கும் பணிகள் பன்முகப்படுத்தப்படவுள்ளன என அமைசா் தெரிவித்துள்ளார் (ஐ)

# தேர்தல் காலத்தில் மோசடி புரிந்த 1,000 பொலீஸாரைக் காணவில்லையாம்

கொழும்பு,ஜன.8

கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியானதை அடுத்து பொலஸ் திணைக்களத்தைச் சேர்ந்த ஆயிரம் பொலீஸாரைக் காணவில்லை என்று 'லக்பிம' சிங்கள வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் அரசியல் வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்து, தேர்தல் மோசடிகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்ட பொலீஸாரே இவ்வாறு காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போயுள்ள பொலீஸாரில் 161 பேர் வன்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் எனவும், அவர்களைக் கைதுசெய்யும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

காணாமற்போயுள்ள பொலீஸாரில் ஏனையோர் சுகவீன விடுப்பில் சென்றனர். ஆனால் அவர்கள் லீவு விண்ணப்பத்தில் தெரிவித்த முகவரிகளில் தற்போது இல்லை. இவ்வாறு காணாமற்போயுள்ள பொலீஸாரில் 5 பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலீஸ இன்ஸ்பெக்டர்கள், பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள், உதவிப் பொலஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரும் அடங்குவர். (ஐ)

# நாகர்கோவில் மக்கள் கைவிட்டுவந்த உடைமைகளை மீட்டுவர உதவுக!

## அமைச்சருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

வடமராட்சி கிழக்கு, ஜன.8

நாகர்கோவில் பகுதியில் மக்கள் இடம்பெயர்வின்போது, கைவிட்டு வந்த பெறுமதிமிக்க கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் வீட்டு உடைமைகளை மீட்டுவர உதவுமாறு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் அப்பகுதி பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாகர்கோவில் மேற்கு கடற்றொழிலாளர் சங்கம், நாகர்கோயில் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம், நாகர்கோயில் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய அமைப்புகளே இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதுடன், அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளன.

நாகர்கோவில் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்திருந்தபோதிலும், மக்கள் கடந்த காலங்களில் தமது உடைமைகளை மீட்டுவருவதற்கு போர் நிலைமையைக் காரணம் காட்டி இராணுவத் தரப்பினரால் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாகவும் -

தற்போது யுத்தநிறுத்தம், மோதல தவிர்ப்பினை புலிகளும், அரசும் நடைமுறைப்படுத்தியுள்ளதால் இச் சந்தர்ப்பத்தில் மக்களின் உடைமைகளை மீட்பதற்கு உதவுமாறு அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம், யாழ்.அரச அதிபர், நாகர்கோயில் பகுதி இராணுவ அதிகாரி, மருதங்கேணி உதவி அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக நாகர்கோயில் பிரதேச பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் க.ஆனந்தமூர்த்தி தலைமையில் 7 பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (க-182)

## பாளைக்குள் இருந்த பாம்பு தீண்டியது!

தென்மராட்சி,ஜன.8

மிருசுவில் பகுதி தென்னந்தோட்டம் ஒன்றிலிருந்து விறகைச் சைக்கிளில் ஏற்றிவந்தவரை தென்னம் பாளைக்குள்ளிருந்த பாம்பு தீண்டிய சம்பவம் நேற்றுமுன்தினம் துன்னாலை தெற்கு வேம்படியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசாமி தங்கவேல் (வயது 32) என்பவரேபாம்பினால் கடியுண்ட நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-117)

## குழந்தைகளுக்கு பரவிவரும் வயிற்றோட்டம்

தென்மராட்சி,ஜன.8

வடமராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தையடுத்து சிறுகுழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவிவருகிறது.

வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தைகள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கரவெட்டி தெற்கைச் சேர்ந்த சுதாகரன் லக்ஸ்மன் (வயது 8 மாதம்), கரவெட்டி சரஸ்வதி வீதியைச் சேர்ந்த கரன் கஸ்பன்ராஜ் (வயது1), புலோலி மேற்கைச் சேர்ந்த இராமச்சந்திரன் தர்சன் (வயது 2), கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த செல்வராசா ரஜீவா (வயது 9மாதம்), பருத்தித்துறை நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சிவராசா தர்சிகா (வயது 11/2) ஆகியோர் வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரி சிறுவர் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-117)

# விதை உற்பத்தியை ஊக்குவிக்க ஐ.நா.நிறுவனம் நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்டத்தில் விவசாயச் செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் 10 லட்சம் ரூபா நிதி உதவி யாழ்.மாவட்ட விதைகள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படவுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான விதை உற்பத்திகளைப் பெருக்கி, விவசாயிகளை விவசாயத்துறையில் ஊக்குவிக்கும் நோக்குடனேயே இந்த நிதி உதவி வழங்கப்படுவதாக ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 3 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ-180)

## 17பேருக்கு சுயதொழில் முயற்சிக் கடன்

சண்டிலிப்பாய்,ஜன.8

பிரான்பற்று கிராம அபிவிருத்தி சங்கம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் கிடைத்த நிதிமூலம் சங்க உறுப்பினர்கள் 17 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கடனைக் கடந்த வாரம் வழங்கியுள்ளது. (க-135)

## மூன்று முக்கிய விடயங்கள் சம்பந்தமாக

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக அரசு விசாரணை நடத்த முடிவு

கொழும்பு,ஜன.8

வன்முறைகளைத் தூண்டியமை, கிரிமினல் குற்றச்சந்தேக நபர்களைப் பாதுகாத்தமை, ஊழல் புரிந்தமை ஆகியன தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவது என்று அரசு முடிவுசெயதுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 31ஆம் திகதி நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கரு ஜெயசூரியா, எஸ்.பி.திஸநாயக்க உட்படபல அமைச்சர்களும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

காலஞ்சென்ற அமைச்சர் காமினி அத்துக்கோறளையும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். அவரே இந்தப் பிரேரணையை முன்மொழிந்தார்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வருவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (க-3)

MATHS CENTER A/L 2004
M.M.V. Road, Nelliady.

| கலைப்பிரிவு | வர்த்தகப்பிரிவு |
| --- | --- |
| பொருளியல்:- | திரு.அன்ரனி |
| அளவையியல்: திரு.பிரபாநந்தன் | கணக்கீடு: திரு.பார்த்திபன் |
| தமிழ்: திரு.அகிலன் | வணிகக் கல்வி: திரு.உதயமோகன் |
| இந்துநாகரிகம்: திரு.இராஜேஸ்கண்ணா | வணிகப் புள்ளிவிவரவியல்: திரு.தவநேசன் |
| நாட. அரங்கியல்: திரு.பிரதீபன் | |
| அரசியல்: திரு.சந்துரு | |
| ஆரம்பம்:- 09-01-2002 (ப.நே.) புதன் காலை 7.00 | ஆரம்பம்:- 09-01-2002 (ப.நே.) புதன் காலை 8.00 |

(96748)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



சிவஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்

எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததோடல்லாமல் கட்டடம் நிறுவுவதற்கான காணியையும் உவந்தளித்த குருக்கள் அவர்களை நாம் நினைவுகூருவதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக நீர்வை முருகனை வேண்டுகின்றோம்.

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் ஐ.நா.சங்கம்,
நீர்வேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சனசமூக நிலையம்.
(96809)

கண்ணீர்ப் பூக்கள்

ஆறுமுகம் மகாதேவன்
(இரசாயனவியல் பேரறிஞர்)



தோணியாய் எமைச் சுமந்து
துறைசேர வைத்தவரே!
ஏணியாய் எமக்கிருந்து
ஏற்றங்கள் தந்தவரே!! - கலை
வாணியாய் அறிவூட்டி
கனவுகளை மெய்ப்பித்தவரே!!! -இன்று
நாம் உமக்கு
காணிக்கை ஆக்குவதோ கண்ணீர்ப்
பூக்களையே.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இடைக்காடு ம.வி. உயர்தர விஞ்ஞானப் பிரிவு
அச்சுவேலி. (96811) மாணவர்கள்.

கண்ணீர் அஞ்சலி

மக்கள் வங்கி, பருத்தித்துறைக் கிளையின்
முகாமையாளர்
பொன்னையா கணேசலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரது ஆத்மா இறைவனடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
உடுயகதிர்காமம், புலோலி.
மருதங்கேணி.
(96810)

# கட்டாயக் கல்வி தொடர்பாக விழிப்புணர்வைத் தந்த நிகழ்வுகள்

கட்டாயக்கல்வி தொடர்பான பல வேலைத் திட்டங்கள் அண்மையில் வலிகாமம் கல்வி வலயத்தில் முன்னெடுக்கப்பட்டன.

மாணவர்கள் சிறுவர்களிடையேயும் குறிப்பாகப் பெற்றோர்களிடையேயும் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் சுற்றுலாக் குழுக்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன. சுகாதாரம் பேணல், போலியோ ஒழிப்பு சம்பந்தமாகவும் பிரசாரங்கள் செய்யப்பட்டன.

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக கோட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள், முன்பள்ளிகள், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் ஆகியவற்றுக்கு சுற்றுலாக் குழுக்கள் விஜயம்செய்தன.

கல்வியின் அவசியத்தை மறந்த பல சிறுவர்கள் - பாடசாலைக்குச் செல்லாதிருந்த பிள்ளைகள் - இடையில் விலகல் மேற்கொண்ட பிள்ளைகள் எனப் பல்ரை



எங்களுக்கும் கல்வி வேண்டும்

இவர்கள் தமது விஜயத்தின்போது சந்திக்கமுடிந்தது. அவர்கள் பற்றிய விவரங்களையும் திரட்டிக்கொண்டனர்.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் மல்லாகம் மகா வித்தியாலய மாணவர்கள் நிகழ்த்திய தெருக்கூத்து, எல்லோருக்கும் கல்வி அவசியம் என்ற உணர்வைத் தூண்டி பார்வையாளர்களை விழிப்படையவைத்தது.

வறுமை, பிள்ளைகளைக்கொண்டு வேலை செய்வித்தல், பாரபட்சம் காட்டல், பெற்றோரின் கவனயீனம் போன்ற பல கல்வித் தடைகளை உடைத்து, கட்டாயக் கல்வியை நோக்கி இளம் சமூகம் வீறுநடைபோடத் தொடங்கியுள்ளமையை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர் குறியீட்டு நாடகம் மூலம் வெளிப்படுத்தினர்.

## செய்திக் கட்டுரை

ஆசிரியர் எஸ்.சிவகுமாரின் நெறிப்படுத்தலில் ஸ்கந்தா மாணவர்கள் நிகழ்த்திய குறியீட்டு நாடகம் அனைவரையும் உணர்வுபூர்வமாகச் சிந்திக்கவைத்தது.

படிப்பதற்கு ஆசைப்பட்டோம்; பள்ளியை நேசிக்கின்றோம். ஆனால், வறுமை எங்களை வாட்டுகிறது. பெற்றோர்களை நம்புகிறோம்; மதிக்கின்றோம். ஆனால் பெற்றோர் எம் கல்வியில் அக்கறையின்றி இருக்கின்றனர். பசி குடலை வாட்டுகிறது. படிப்பு எப்படிவரும்? பசிக்கு உணவுதேட உழைக்க வேண்டியுள்ளதே என்ற பல ஆதங்கங்கள் மாணவர் உள்ளத்தில் பொதிந்து கிடந்ததை அவர்களின் வெளிப்பாடுகள் உணரவைத்தன.

'வளர்ந்துவிட்டது தகவல் தொழில் நுட்பம்; பின்னடைந்துவிட்டது நம் கல்விநிலை. வேண்டாம் இந்நிலை இனி நமக்கு' - என்று அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

கருவறையில் கல்வி, பிறந்தவுடன் தொட்டிலில்



கல்விக்கு முன்னுள்ள தடைகளை நீக்குவதைச் சித்திரித்த நாடகக் காட்சி - அளவெட்டி அருணோதய மாணவர்கள்.

கல்வி, பின் குழந்தைக் கல்வி, சிறுவர்கல்வி, இளைஞர் கல்வி, தொழிற் கல்வி என வாழ்வின் சகல மட்டத்திலும் கல்வி விரிவடைந்துள்ளது. இந்நிலையில் சகலரும் கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்புகள் இங்கு உண்டா? வசதிகள் உள்ளனவா? இருக்கின்ற கல்வி வசதிகள் - வாய்ப்புகளை நாம் சரியாகப் பயன்படுத்துகிறோமா? கல்வியைத் தொடர நமக்கிருக்கும் தடைகள் எவை? அவற்றை நீக்கிச் சகலருக்கும் எவ்வாறு கல்வியை வழங்கலாம் என்பதுபற்றி புத்திஜீவிகள் - பெரியோர்



எல்லோருக்கும் கல்வி பற்றிய விளக்கம் - இடம் பெயர்ந்தோர் முகாம் ஒன்றில்.

கள் - எமது தலைவர்கள் எல்லோரும் சிந்திக்கவேண்டிய காலமிது.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், பெற்றோர்களின் அறியாமை போன்ற பல காரணங்களால் எமது கல்வி பின்னடைந்துள்ளது. எத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் எல்லோருக்கும் கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்தி, முன்னெடுக்க நாம் அனைவரும் உறுதிகொள்ளவேண்டும.

**- வி.பி. சர்மா (வலி.தெற்கு செய்தியாளர்.)**

வலிகாமம் தெற்கு கல்விவலய முறைசாரப் பிரிவு, சுகாதாரத் திணைக்களம், 'யுனிசெவ்' ஆகியன ஒன்றிணைந்து நட்த்திய அண்மைக்காலச் செயற்பாடுகள் மக்கள் மதத்தியில் கல்வி பற்றிய விழிப்புணர்வையும், நல்ல செல்வாக்கையும் ஏற்படுத்தியுள்ளன என்பதை இச்சுற்றுலாவின்போது அவதானிக்க முடிந்தது. ☆

## யாழ்.மாநகர சபையின்

# பொன் விழாவைக் கொண்டாட மக்களிடமும் நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ். மாநகரசபையின் பொன் விழாவை முன்னிட்டு பொதுமக்களிடம் இருந்து நிதி பெறுவதற்காக வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு யாழ்மாநகரசபை நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அரச வங்கியொன்றில் இவ் விசேட கணக்கினைத் திறப்பதற்கான ஏற்பாடுகளை பொன்விழா ஏற்பாடுக் குழுவின் தலைவர் கிங்ஸ்லி கணேசன் மேற்கொண்டு வருகிறார்.

பொன்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக சபையின் நிதியில் இருந்து சுமார் பத்து லட்சம் ரூபாவரை ஒதுக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இவ்விசேட வங்கிக் கணக்கும் ஆரம்பிக்கப்பட்டு, பொதுமக்கள் மற்றும் ஆர்வமுள்ள சகலிடமும் இருந்து நிதி திரட்டப்படவுள்ளது.

வங்கிக் கணக்கு திறக்கப்பட்ட பின்னர் அதில் வைப்புச் செய்வது தொடர்பான அறிவுறுத்தல்கள் பொது மக்களுக்கு வழங்கப்படும்.

(ஐ-9)

## தென்மராட்சிக்கு திரும்பிச்செல்லும் மக்கள்

# தமது கொட்டில்களை அகற்றி எடுத்துச்செல்ல அனுமதி மறுப்பு!

வடமராட்சி கிழக்கு,ஜன.8

வடமராட்சியில் முகாம்களில் தங்கியிருந்து தற்போது தென்மராட்சியிலுள்ள சொந்த இடங்களுக்குத் திருமபிச்செல்லும் மக்கள் தாம் வசித்த முகாம் கொட்டில்களைப் பிடுங்கி எடுத்துச்செல்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் தடுக்கின்றார்கள் என முறையிடப்படுகின்றது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் இடம்பெயர்ந்த இம்மக்களுக்கு முகாம்களில் கொட்டில்களை அமைத்துக் கொடுத்தபோது, அம்மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும்போது அக் கொட்டில்கள் அமைக்கப்பட்ட பொருள்களைத் தம்மோடு எடுத்துச்செல்லலாம் எனக் கூறப்பட்டதாகவும், ஆனால் அரச உத்தியோகத்தர்கள் தற்போது அதனைத் தடுக்கின்றார்கள் எனவும் மக்கள் குறைபட்டுக் கொள்கின்றார்கள்.

போர் நடவடிக்கையினால் தமது வீடுகள் அழிக்கப்பட்டுள்ளமையினால், இப்பொருள்களைக் கொண்டுபோனால் தான் தமது இருப்பிடங்களை அமைக்க முடியும் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றார்கள்.

(க-182)

### மானிப்பாய்ப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை

வலி.தென்மேற்கு - மானிப்பாய் உப அலுவலகப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை அமைக்கப்பட்டு வருகின்றது.

சந்தைக்குப் பொருத்தமான இடமொன்றைத் தெரிவுசெய்யும்வரை புதிய இடத்தில் தற்காலிகமாக இந்த இறைச்சிக்கடை இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனைக் கோட்டைப் பகுதியில் விரைவில் சந்தை அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (க-185)

### தனியார் கடையில் கட்டுப்பாட்டு விலையில் ம.எண்ணெய் விநியோகம்

தென்மராட்சி,ஜன.8

நெல்லியடியிலுள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு வந்த 3 ஆயிரம் லீற்றர் மண்எண்ணெய் நேற்றுமுன்தினம் பொதுமக்களுக்கு தலா ஒரு லீற்றர் வீதம் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்பட்டது.

மக்கள் நீண்ட வரிசையில் நின்று மண்எண்ணெயை வாங்கிச் சென்றனர்.

கடந்தவாரம் கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்திற்கு வந்த 3 ஆயிரத்து 300 லீற்றர் மண் எண்ணெய் கிளைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

### கிணற்றில் தவறிவீழ்ந்த வயோதிபர் மரணம்!

தண்ணீர் அள்ளச்சென்ற வயோதிபர் கிணற்றில் தவறிவீழ்ந்து பலியான சம்பவம் நேற்றுமுன்தினம் துன்னாலை கோயில்கடவை என்னும் இடத்தில் இடம்பெற்றது. இதே இடத்தைச்சேர்ந்த எஸ்.நடேசு (வயது 75) என்பவரே மரணமானார்.

## வாசகர் திருமுகம்

### உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்ற இருந்த பெரும்பாலான பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றமுடியாத அபாயநிலை காணப்படுகிறது. காரணம் என்னவெனில் பரீட்சைக்கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டு பெறும் காலம் முடிவடைந்துவிட்டதாகவும், தமக்குப் பின்னர் இது பற்றிய எந்தவித அறிவித்தலும் வரவில்லை என்றும் அஞ்சல் அலுவலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் அரசவர்த்தமானி அறிவித்தலில், கடந்த டிசெம்பர் 15ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 15ஆம் திகதிவரை உரிய பற்றுச்சீட்டுக்களை வழங்குமாறு தபால் திணைக்களத்திற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சைக்கான விண்ணப்பம் போய்ச்சேரவேண்டிய இறுதிநாள் எதிர்வரும் 15 ஆம் திகதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தபால் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் இதுவிடயத்தில் அக்கறை யீனத்தை வெளிக்காட்டுகிறார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

எனவே தற்போதுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் தமது தலைமைப்பீடத்துடன் தொடர்புகொண்டு இதுவிடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் நின்றுவிடாது அது பற்றிய விடயங்களை தாமதிக்காமல் உரிய பணிப்புரைகளை வழங்கும்படியும் பாதிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

*கரவெட்டி* **கே.பார்த்தீபன்.**

### ஆயரின் கடிதத்தில் அரசசார்பு ஊடுருவலா?

2.1.2002 ஆம் திகதி "உதயன்" பத்திரிகையில் வெளியான மன்னார் ஆயரின் கடிதத்திற்கு பின்வரும் கருத்துக்களை முன்வைக்கின்றேன்.

அக்கடிதத்தில் வெறுமனே அரசசார்புடைய அடிவருடித்தனமான கருத்துக்களே வெளியாகியுள்ளன.

மிகவும் பொறுப்புள்ள பணியை ஆற்றுவதுடன், மக்களுக்கான சேவையையே முக்கிய நோக்காகக் கொண்டிருப்பவராக, மக்கள் கருதும் விதத்தில் தமது நடவடிக்கைகளைக் மேற்கொள்ளும் ஆயர் - இவ்வேளையில் விடுதலைப் புலிகள் உணர்ச்சி வசப்படக்கூடாது என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் மனவருத்தத்துக்கு உரிய விடயமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடந்தகாலத்தில் விடுத்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்புக்களின் மூலம் தாம் சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்பதையும் அதுகுறித்து உணர்ச்சிவசப்பட்டவர்கள் அல்லர் என்பதையும் உலகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள் யாவரினதும் ஏகப்பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை சர்வதேசம் அறிந்துவிட்ட பின்பு மிகவும் பொறுப்பான பதவியைவகிப்பவரும் சர்வதேசரீதியாக மதிப்பளிக்கக்கூடிய கருத்துக்களை வெளியிடக்கூடிய மனிதருமான ஆயர், காலத்தின் - இனத்தின் - தேவையை அறிந்து கருத்துக்களை வெளிவிடவேண்டிய நிலையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றேல் மக்களால் ஒதுக்கப்பட்ட - ஒதுக்கப்படப்போகின்ற - அரசியல்வாதிகளின் பட்டியலில் மதிப்புக்குரிய ஆயரின் பெயரும் அடங்கிவிடுமே என்ற கவலை எனது மனதை உறுத்துகிறது.

*சுன்னாகம்.* **காயத்திரி.**

### புத்தூர் வண்ணாத்திப்பாலம் மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்படுமா?

கௌரவ இந்துசமய கலாசார அமைச்சருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதுடன், அவரின் கவனத்துக்குப் பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன்.

வன்னிக்கான தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு முன்னர் குடாநாட்டில் மூடப்பட்டுள்ள எத்தனையோ வீதிகள் திறக்கப்படவேண்டும்.

குறிப்பாக தென்மராட்சிக்கு போவதானால் இரண்டு பாதைகள் ஊடாகவே மக்கள் போகமுடியும். அதுவும் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் தான் பயணம் தொடர்கிறது. தென்மராட்சியில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயிலுக்கு பக்தர்கள் போவதற்கு எவ்வளவோ சிரமப்படுகிறார்கள்.

இந்த ஆலயத்துக்கு பக்தர்கள் செல்ல வசதியாக வண்ணாத்திப்பால வீதியைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர் என நினைக்கிறேன். வலிகாமத்தில் இருக்கும் தென்மராட்சி மக்கள் இப்பாதை திறந்தால் எவ்வளவோ பயன் அடைவர். தென்மராட்சியில் யுத்தத்தால் அழிந்து போன் ஆலயங்களையும் புனரமைப்புச்செய்ய உதவுவீர்கள் என நம்புகிறேன். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையாக இருக்கட்டும்

*மந்துவில்.* **க.சிவானந்தம்.**

### மிருக பலியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

முன்னைய ஐ.தே.க.ஆட்சியில் இந்து கலாசார அமைச்சராக இருந்த செல்லையா இராசதுரை இந்து ஆலயங்களில் பலியிடுதலைச் சட்டரீதியாகத் தடைசெய்தார். இதனை எதிர்த்துக் கருகம்பனை கவுணாவத்தை ஆலய தர்மகர்த்தா செல்லக்குட்டி, நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தார். நீதிமன்றம் ஆலயங்களில் இடம்பெறும் வேள்விகளை அரசு தடைசெய்யமுடியாது என தீர்ப்பளித்திருந்தது.

நீதிமன்றம் ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடலாம் என்று தீர்ப்பளித்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலயங்களில் வேள்வி நடைபெறுவதை ஆதரிக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபின்னர் மீண்டும் யாழ்.குடாநாடு எங்கும் பரவலாக இந்து ஆலயங்களில் வேள்விகள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆடுகளும் கோழிகளும் பலியிடப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இதுகுறித்து இந்து அமைப்புகள் பாராமுகமாக இருப்பது ஏனோ தெரியவில்லை. இந்து இளைஞர் பேரவை, இந்துமாமன்றம், இந்துகுருமார் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புகள் என்ன செய்கின்றன?

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் மட்டும் தனது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இந்து ஆலயங்களில் பலியிடுதலைத் தடைசெய்திருந்தார். இதனால் அவர் பல இந்து பக்தகோடிகளின் எதிர்ப்பையும் சம்பாதிக்கநேரிட்டது. ஆனால் இவரது கட்சித் தலைவரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இது விடயத்தில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. ஒருவேளை இந்து அடியார்களின் வெறுப்பைச் சம்பாதிக்கவேண்டி வருமென்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை.

புதிதாகப் பதவியேற்றிருக்கும் இந்து கலாசார அமைச்சர் இதுவிடயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்? கந்தபுராண கலாசாரம், நாவலர் பரம்பரை என்றெல்லாம் தம்மைக் கூறிக்கொள்ளும் யாழ்.இந்து அமைப்புக்கள் என்னசெய்யப்போகின்றன?

*ஆனைக்கோட்டை.* **கபாலிகன்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடற்றவன்

"வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்" நூலை வாசித்தால் வீடற்றவனில் கேட்கக் கூடிய எல்லா வினாக்களுக்கும் விடை எழுதலாம். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். ரூபா 25/=. (96744)

### வகுப்புகள்

சிறந்த ஆசிரியர்கள் மூலம் தரம் 10,11இற்கான ஆங்கிலம், வர்த்தகம், கணிதம், தமிழ், விஞ்ஞானம் வகுப்புகள் ஆரம்பம்: 12.01.2002 3p.m. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (96769)

### தவறிவிட்டது

நவாலி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் முகுந்தராஸ் என்பவருடைய தே.அ.அட்டை (இல.801061885V), வி.அ.அட்டை (இல. 0905014527) என்பன சத்திரத்துச் சந்தியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (96808)

கொடிகாமம், மந்துவில் மேற்கைச் சேர்ந்த தேவேந்திரராசா சுரேஷ்குமார் என்பவரின் விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் துன்னாலை வடக்கு மிஷன் ஒழுங்கையில் உள்ள தற்காலிக இலலத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (C/20126)

### விற்பனைக்கு

பாவனையிலுள்ள பியானோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M.யேசுதாசன், 36/1, ஆசீர்வாதப்பர் றோட், யாழ்ப்பாணம். T.P.இல.3649.(96814)

### புறொயிலர் குஞ்சுகள்

சேலான்இன புறொயிலர் குஞ்சுகள உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வி.குணபாகன், இல.1014, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்; இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P 3353 (96818)

## தூரிகை
நுண் கலையகம்

- ※ புதிய பயிற்சி நெறிகள்
- ※ உடையமைத்தல்
- ※ கேக் ஐசிங்
- ※ HAIR STYLE
- ※ பூவேலை
- ※ துணிப் பெயின்ரிங்
- ※ சமையல் முறைகள்

இவற்றுடன்.....

- ※ சித்திரக் கலை
- ※ புகைப்படக் கலை

ஆகிய பயிற்சிகளுக்கான புதிய பிரிவுகள்
11.01.2002இல் ஆரம்பம்

- ※ மேற்படி பயிற்சிகளில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டாலும் "பல்துறைப் பொதுப் பயிற்சி" இலவசம்!
- ※ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் உண்டு. (96815)

செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
ம.ம.வி. வீதி, நெல்லியடி.

## வடமராட்சி ஆசிரியருக்கு விசேட மினிபஸ் சேவை

வடமராட்சி,ஜன.8

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் வடமராட்சிப் பிரதேச ஆசிரியர்களுக்கென விசேட மினிபஸ்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

மதிப்பீட்டுப் பணி நடைபெறும் தினங்களில் தினமும் பருத்தித்துறையிலிருந்து மந்திகை, கலிகைச் சந்தி, நெல்லியடி ஊடாக ஒரு மினிபஸ சேவையும், பருத்தித்துறையிலிருந்து மாலி சந்தி, உடுப்பிட்டி ஊடாக மற்றொரு மினிபஸ் சேவையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி வரை நடைபெறும். (க-173)

## துணைக்கு ஆள் தேவை

ஓ[illegible] வந்த தம்பதியரைக் கூட இருந்து துணையாகப் பராமரித்துப் பார்க்கக்கூடிய ஓர் ஆள் (பெண்) தேவை.
(வீட்டு வேலைகள் எதுவும் செய்யத் தேவையில்லை. வயது 20-35).
*விரும்புவோர் நற்சான்றுப் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.*

**விளம்பர இல. 1429,**
**மே.பா. உதயன், யாழ்ப்பாணம்.**

(96813)

## போதனாசிரியர்கள் தேவை

யாழ்நகரில் உள்ள கணனிப் பயிற்சி நிலையமொன்றிற்கு தகுதியுடைய கணனிப் போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. Ms Office, Visual Basic, Pagemaker, Corel Draw போன்ற பயிற்சி நெறிகளில கற்பிக்கும் தகைமையுடையவர்கள் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

*விண்ணப்பங்கள் 12-01-2002ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பலாம்.*
*விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:*

**விளம்பர இல. 1432,**
**மே.பா. உதயன்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/20129)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்
## 08.01.2002



அமரர்
## முருகன் சின்னத்துரை

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 02.03.1932 | 09.12.2001 |

*அன்புள்ள அப்பாவாய் – அறிவுரைக்கும்*
*ஆசானாய் எம்மை ஆளாக்கிய தந்தையே!*
*இன்பம் அனைத்தும் நாம்பெற்று வாழ்வில்*
*ஈடேற வைத்த எம் அன்புத் தெய்வமே!*
*உள்ளத்தில் உம் நினைவலைகள்*
*ஊற்றாகி, அருவியாய் உருகியோட*
*எம்மையெல்லாம் தவிக்க விட்டு*
*ஏனையா ஈசனடி காண விரைந்தாய்?*
*ஐயாறு நாள்கள் ஆனாலும் எம்மனதில்*
*ஆறாது சோகம்; அகலாது உம் நினைவு.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

எமது அன்புத் தந்தையின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோர், ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (2002.01.08) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கு.சகுந்தலாதேவி *(மகள்)*
குடும்பத்தினர்.

*விஸ்ணு வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(C-20128)



மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வை வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன், பிரதேச முகாமையாளர் கே.சிவபாதவிருதயர், சாவகச்சேரி கிளை முகாமையாளர் கு.ரகு ஆகியோர் உள்ளனர். (ஜ-180



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 'பி' மாவட்டத்தினால் நடத்தப்பட்ட 'சமாதான நீதிவான்கள் நன்றாக சேவை செய்ய' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படம். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் லயன் திருமதி சரோஜினி இளங்கோவன் உரையாற்றுகிறார். (ஐ)

## சனசமூக நிலைய நிர்வாகங்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜன.8

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் தமது நிலையத்தின் சகல ஆவணங்களுடனும் எதிர்வரும் 13ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க-10)

## வீதிக்கு ஓடிய சிறுவன் விபத்தில் சிக்கியதில் கால் முறிந்தது!

வீட்டுக்குள்ளிருந்து வீதிக்கு ஓடிய நான்கு வயதுச் சிறுவனை வீதியில் வந்த சைக்கிள் மோதியதில் கால் முறிந்த சம்பவம் நெல்லியடி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

கடந்தவார இறுதியில் நடந்த இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த யோகராசா பிரியங்கன் என்ற சிறுவன் கால் முறிவுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-117)

## தவறிவிட்டது

கரவெட்டி தெற்கைச் சேர்ந்த செல்லையா உருத்திராதேவி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.725793618V), விசேட அடையாள அட்டை (இல.09001751) இரண்டும் யாழ்.சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் தவறிவிட்டன. பட்டதாரி பயிலுநர் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றவிருப்பதால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடுவில் மகளிர் கல்லூரியில் உடன் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96823)

## 8ஆம் ஆண்டு நினைவுநாள்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| [illegible] - 08 - 1937 |  | 06 - 01 - 1994 |

அமரர்
## சங்கரப்பிள்ளை நமசிவாயம்

*(உரிமையாளர் - அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி)*
திதி: மார்கழி மாத அபரபக்க தசமி 08-01-2002

எங்கள் குடும்பத் தலைவரே!
உங்கள் கடந்த காலத்தின் இலட்சியமும் உழைப்பும்தான்
எங்கள் நிகழ் வாழ்க்கையை உருவாக்கிக்கொடுத்தது
நாங்கள் தொடர்ந்தும் உங்கள் இலட்சியப்படி வாழ்வதற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையவும்
சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

*"இன்பகம்",*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

குடும்பத்தினர்,
*சரசாலை வடக்கு, சாவகச்சேரி.*

(96826)

# சிங்களவாதம் தோற்றுப் போகின்றது! சிறுபான்மையினர் கை ஓங்குகின்றது!!

## 'சிஹல உறுமய' பிரமுகர் சம்பிக்க ஆதங்கம்

**1958ஆம், 1983ஆம் ஆண்டுகளில் இந்நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களின்போது எத்தனையோ தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்; அவர்களது உடைமைகள் சூறையாடப்பட்டன; தீயிடப்பட்டன. ஆனால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அந்த வன்முறைகளைப் புரிந்தோர் யார்? சிங்களவர்கள் அல்லர் என்கிறார் 'சிஹல உறுமய' கட்சியின் செயலாளர் பாடலி சம்பிக்க ரணவக. இம்முறை தேசியப் பட்டியலில்கூட ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு. "லக்பிம" சிங்கள வார இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தமிழில்: கஜனி

ஸ்ரீலங்காவில் 12ஆவது நாடாளுமன்றம் தற்போது செயற்பட ஆரம்பித்துவிட்டது. கடந்த பொதுத் தேர்தலில் இனவாதம், மதவாதம் ஆகியன தோல்வியைத் தழுவின என்று அரசியல் விமர்சகர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இவர்களுடன் ஐ.தே.கட்சி, பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி.மற்றும் தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதக் கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து இனவாதம் தோல்விகண்டுள்ளது எனக் கூறுகின்றனர். இவர்கள் அனைவரும் பொதுத் தேர்தலில் சிஹல உறுமய அமைப்பு (கட்சி) பொதுத் தேர்தலில் சந்தித்த தோல்வியை மனதில் வைத்தே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்பது தெளிவு. இவர்களது கருத்துப்படி இனவாதம் என்பது சிங்கள மக்களின் துயரங்களை எடுத்துக்கூறுவது என்பதேயாகும். சிங்கள இனத்துக்காக எவரும் ஆயுதம் ஏந்தவில்லை. சிங்களவர் ஒருவர் எங்காவது படுகொலை செய்யப்படும்போது சிங்களவர் அல்லாத எவரது உடைமைகளையும் எவரும் தீயிடவில்லை. சிங்களவர் அல்லாத் எவரையும் படுகொலை செய்து, அவர்களது கிராமங்களில் இருந்து, சிங்களவர்களை விரட்டியடிக்கவில்லை. இது எமது தாயகம் என்பதால் சிங்களவர்கள் அல்லாதோர் இங்கிருந்து வெளியேற வேண்டும் என சிங்களவர் எவரும் கூறவில்லை. எனவே சிங்கள இனவாதம் எனக்கூறுவது செத்த பாம்பை அடிப்பதுபோன்ற அர்த்தமற்ற வாதமாகும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது உண்மையில் என்ன நடந்தது? இனவாதமோ அல்லது அடிப்படைவாதமோ தோல்வியைத் தழுவியதா? இல்லை. சிங்கள எதிர்ப்பு இனவாதமும மத அடிப்படைவாதமுமே வெற்றி பெற்றன.

முதலில் நாம் நாடாளுமன்ற அமைப்புக் குறித்து சற்றுச் சிந்திப்போம். நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 20 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 18 உறுப்பினர்கள் வடக்குக் கிழக்கைத் தமிழ் மக்களின் தாயகம் என்று ஏற்றுள்ளவர்கள். இதில 16 உறுப்பினர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனப் பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பை ஏற்றுள்ளனர். இந்த நாட்டில் மனிதப் படுகொலைகளை மேற்கொண்ட விடுதலைப் புலிகளைத் தமது தலைவர்களாக ஏற்றுக்கொண்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள நாடாளுமன்றம் எவ்வாறு இனவாதமற்ற நாடாளுமன்றமாக அமையும்? இதற்கிடையில் இலங்கைத் தமிழர்கள் நாட்டின் சனத்தொகையில் 12 சதவீதமானவர்கள் எனவும், எனவே தங்களுக்கு குறைந்தது 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கப்படவேண்டும் எனவும் தமிழினவாதிகள் கோருகின்றனர். 2001ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 11 லட்சத்து 5 ஆயிரத்து 537 பேர் ஆகும். இது நாட்டின் குடிசனத் தொகையின் 9 சதவீதமாகும். குடிசன மதிப்பீட்டின்படி நாடாளுமன்ற உறுப்பினர்களை வழங்குவதாயின் இலங்கைத் தமிழர்களுக்கு 20 நாடாளுமன்ற உறுப்பினர்களையே வழங்கமுடியும். ஆனால் அப்படி வழங்கப்படவில்லை. மறுபுறத்தில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாடுகளில் பிரஜா உரிமையைப் பெற்றுமுள்ளனர். இருப்பினும் அவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்புகளில் இருந்து இன்னும் நீக்கப்படவில்லை. இதன் காரணமாக உண்மையில் இரண்டரை லட்சம் வாக்காளர்கள் உள்ள யாழ்.மாவட்டத்தில் ஆறரை லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளன. இதனால் அவர்களுக்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என தமிழர் கூட்டமைப்பு கோஷம் எழுப்புகிறது. ஆனால் உண்மைநிலை என்னவெனில் வடமாகாணத்தின் சரியான குடிசன மதிப்பீட்டு எண்ணிக்கையின்படி கிடைக்கவேண்டிய 9 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதிலாக தற்போது 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர்.(யாழ்ப்பாணம் மற்றும் வன்னி) இதை ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகளிலிருந்து அறிந்துகொள்ள முடியும். ஜே.வி.பி. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற 50 ஆயிரம் வாக்குகளையும், பொ.ஐ.முன்னணி 43 ஆயிரம் வாக்குகளையும், ஐ.தே.கட்சி 36 ஆயிரம் வாக்குகளையும் பெற நேரிட்டுள்ளது. ஆனால் தமிழர் கூட்டமைப்பினர் தலா 23 ஆயிரம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர். புளொட் அமைப்பு பெற்ற வாக்குகள் 16 ஆயிரம் மட்டுமே. பொதுவாக சிங்கள மக்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவுசெய்ய சராசரியாக 36 ஆயிரம் வாக்குகளை அளித்துள்ளனர். ஆனால் அதேவேளை, தமிழ் மக்கள சராசரியாக 16 ஆயிரம் வாக்குகளை அளித்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்துள்ளனர். இந்நிலையில் சிஹல உறுமய 50 ஆயிரம் வாக்குகளைப் பெற்றபோதும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட தெரிவு செய்யப்படவில்லை. இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. இதைவிட ஓர் இனவாத நாடாளுமன்றம் வேறு இருக்கமுடியுமா? இந்தியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை நாடாளுமன்றத்திற்கு 10 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்கள். குடிசன மதிப்பீட்டின்படி இந்தியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த குறைந்தது 16 நாடாளுமன்ற உறுப்பினர்களாவது இருக்கவேண்டும் என ஓர் இனவாத எழுத்தாளர் எழுதியிருந்தார். எந்தப் புள்ளிவிவரத்தின் அடிப்படையில் அவரது வாதம் அமைகிறது எனத் தெரியவில்லை. 2001 குடிசன மதிப்பீட்டின்படி ஸ்ரீலங்காவிலுள்ள இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை 8 லட்சத்து 60 ஆயிரத்து 91 ஆகும். இது மொத்த எண்ணிக்கையின் 5 சதவீதம் மட்டுமே. இந்தியத் தமிழர்களில் ஆகக்குறைந்தது 3 லட்சம் பேருக்காவது பிரஜா உரிமை இல்லை. இதன்படி இந்நாட்டிலுள்ள வாக்காளர்களில் இந்தியத் தமிழர்கள் 3.75 சதவீதமானவர்களே. 37 ஆயிரத்து 500 இந்தியத் தமிழருக்கு ஒருவர் வீதம் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரங்களுக்கு அமைய இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்களை 24 பிரதிநிதிகள் மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் கடந்த தேர்தலில் இது 30 ஆக அதிகரித்துள்ளது.

### முஸ்லிம் பிரதிநிதித்துவம்

அடுத்தவிடயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமாகும். நாட்டின் சனத்தொகையில் முஸ்லிம்கள் 9 சதவீதத்தை (16,66,789) வகிக்கின்றனர். 11ஆவது நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளையும் சேர்ந்த 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். ஆனால் தற்போதைய நாடாளுமன்றத்தில் இது 25 ஆக அதிகரித்துள்ளது. உண்மையில் குடிசன விகிதத்தின்படி 19 உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அமைச்சரவையில முஸ்லிம் அமைச்சர்களின் எண்ணிக்கை புதுமையானவிதத்தில் அதிகரித்துள்ளது. இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆகக குறைந்தது 14 பேர் முஸ்லிம் அடிப் படைவாதத்தைத் தமது அரசியல் அடிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். நாடாளுமன்றத்தின் நிலையியற்கட்டளை (84-1) யின்படி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபா நாயகரின் பெயரை அழைத்தே தமது உரைகளை மேற்கொள்ளவேண்டும். இதன்படி சபாநாயகரின் அனுமதியுடனேயே உரையாற்றவேண்டும் என்பது மரபாகும். இருப்பினும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட முக்கிய முஸ்லிம் அடிப்படைவாதிகள் 14 பேர் நாடாளுமன்றத்தில் தமது உரையை "குர் ஆன்" ஓதி அல்லாவுக்கு நன்றி கூறிய பின்னரே ஆரம்பிக்கிறார்கள். எந்தவொரு பௌத்த உறுப்பினரும் புத்தபிரானுக்கு நன்றி கூறியோ அல்லது எந்தவொரு கிறிஸ்தவ உறுப்பினரும் யேசு பிரானுக்கு நன்றி கூறியோ தமது உரையை ஆரம்பிப்பதில்லை. எந்தவோர் இந்து உறுப்பினரும் கடவுளுக்குத் தோத்திரம் பாடி தமது உரையை நாடாளுமன்றத்தில் ஆரம்பிப்பதில்லை. ஆனால முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற நிலையியற் கட்டளையையோ அல்லது சம்பிரதாயத்தையோ அனுசரிப்பதில்லை.

அதுமாத்திரமன்றி முஸ்லிம் காங்கிரஸ் தனியாகப் போட்டியிட்டு சுமார் ஒரு லட்சம் வாக்குகளைப் பெற்று 5 நாடாளுமன்ற ஆசனங்களைத் தனதாக்கிக்கொண்டது. இதன்படி தலா 21 ஆயிரம் வாக்குகளைப் பெற்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஐ.தே.கட்சித் தலைவர் தனது அமைச்சரவையை அமைத்தவேளையிலும், தேசியப் பட்டியலைத் தயாரித்த வேளையிலும முஸ்லிம் அடிப்படைவாதத்திற்கு அடிபணிந்துவிட்டார். ஐ.தே.கட்சி இதை எவ்வளவுதூரம் மறுத்தாலும் ரணில் - ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான ரசனைமிக்க நாடகங்கள் எதிர்காலத்தில் அரங்கேற வாய்ப்புக்கள் உள்ளன. அதேபோலவே, தேர்தலின் பின்னர் ரத்வத்தையின் படுகொலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆளானதற்கான பழி கம்பளை போன்ற பிரதேசங்களில் வாழும் அப்பாவிச் சிங்கள மக்கள் மீதே வீழ்ந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் திருமதி பேரியல் அஷ்ரப் விசேட அதிரடிப் படையினரின் ஒத்தாசையுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீவிரவாத ஆதரவாளர்கள் இடமளிக்கவில்லை. எதிரிக்கு பாதிப்புகளை அவர்கள் உருவாக்குவதற்கு முன்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தீவிரவாதிகள் தங்களுக்குத் தாங்களே பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். தேர்தல் தொடர்பான வன்செயல்களைக் கவனத்தில் எடுக்கும்போது உடதலவின்ன என்ற இடத்தில் இடம்பெற்ற படுகொலைகள் (10 முஸ்லிம்கள்) மாத்திரமன்றி முஸ்லிம் காங்கிரஸின் அடாவடித் தனங்கள் குறித்தும் கவனத்தில் எடுக்க வேண்டும். ஒரு படுகொலையும் ஒரு தீவைப்புச் சம்பவமும் வன்செயல் எனில் மற்றொரு படுகொலையும் தீவைப்புச் சம்பவமும் எவ்வாறு நியாயமானதாக இருக்கமுடியும். முஸ்லிம அடிப்படைவாதத்திற்கு நாட்டின் நாடாளுமன்றமும் சமுதாயமும் அடிபணிந்துள்ளது.

மறுபுறத்தில் கடந்த வருடத் தேர்தலில் பெயரளவிற்காவது 180 சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தனர். ஆனால் 2001 பொதுத் தேர்தலின்போது 171 சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கடந்த தேர்தலில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டது எனப் பலரும் கூறினாலும் உண்மையில் தோற்கடிக்கப்பட்டது சிங்களவாதமே ஆகும். ★

---

# வலி.வடக்கு மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை அமைச்சர் ஜயலத் நேரில் கண்டறிய வேண்டும்

## அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் வற்புறுத்தல்

வலி.வடக்கு,ஜன.8

வலி.வடக்குப் பகுதியில் இருந்து கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வீடுகள், சொத்துக்கள், தொழில்களை இழந்து அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவல நிலைமைகளை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்தன நேரில் வந்து பார்வையிடவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகரான சி.சிவமகாராசா இவ்வாறு வலியுறுத்தி அமைச்சர் ஜயலத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு அடுத்த வாரம் அமைச்சர் விஜயம் செய்யவுள்ளார். இவ்வேளையில் வலி.வடக்குப் பகுதிக்கு வந்து உண்மையான நிலைமையை நேரில் காணவேண்டும்.

☆ இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களைப் பார்வையிடவேண்டும்.

☆ இந்து ஆலயங்களான தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன் கோயில் என்பவற்றுக்கு விஜயம் செய்யவேண்டும்.

☆ கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைந்துள்ள தெல்லிப்பழை, மயிலிட்டி, ஊரணி பகுதிகளுக்கும் செல்லவேண்டும்.

☆ தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, புற்றுநோப் வைத்தியசாலைப் பகுதிகளுக்குச் சென்று அவற்றின் செயற்பாடுகள் குறித்து ஆராயவேண்டும்.

☆ சொந்த இடத்தில் மீள இயங்க அனுமதிக்கப்படாத பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடசாலைகளின் அவல நிலைமையை நேரில் கண்டறியவேண்டும்.

இந்த விடயங்கள் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம் மகஜரின் பிரதிகள் இந்து கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (க-86)

---

## திவ்வியனை ரவிராஜ் எம்.பி பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை இடம்பெற்ற இழுபறியினால் தோள்மூட்டுக் கழன்ற நிலையில் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

திவ்வியனின் உடல்நிலைபற்றியும் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் அவர் அப்போது கேட்டறிந்தார். (ஐ-180)

---

# சங்கானை மயானப் புனரமைப்பு; விரைவில் வேலை ஆரம்பமாகும்

சங்கானை,ஜன.8

சங்கானை கறைச்சி மயானப் புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புதிய அரசின் நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வலி.மேற்குப் பிரதேச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இந்த மயானப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்த மயானப் புனரமைப்பு வேலைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொள்வதற்கெனக் குழுவொன்றும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி குழுவினர் மயானத்துக்குச் செல்லும் பாதையைப் புனரமைத்தல், மயானத்தில் இளைப்பாறு மண்டபத்தை அமைத்தல், மயானத்தைச் சுற்றிக் கம்பிவேலி அமைத்தல முதலிய பணிகளை மேற்கொள்ளுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-7-29)

---

## பாட்டுக் கச்சேரி

கோண்டாவில்,ஜன.8

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய ஆலயத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இசைத்துறை விரிவுரையாளர் செல்வி வெண்ணிலா தேவி திருஞானந்தத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

காயத்ரீபீட அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் மங்கள விளக்கேற்றி இசையரங்கை ஆரம்பித்து வைப்பார். (க-86)

---

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஜன.8

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடலும் இவ்வாண்டுக்கான குழு நிகழ்ச்சிகளுக்கான அட்டவணை தயாரித்தலும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் இடம்பெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட கழக உறுப்பினர்களை இதில் கலந்துகொள்ளும்படி விளையாட்டு உத்தியோகத்தர் கு.முகுந்தன் கேட்டுள்ளார். (க-86)

## குழு நிலை போட்டிகளுக்கு அணி தெரிவு

யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கான இவ்வருட விளையாட்டு விழாவுக்குரிய குழுநிலைப் போட்டிகளுக்கு அணி நிரல்படுத்தும் பணி இன்று நடைபெறவுள்ளது.

குழு நிலைப் போட்டிகளுக்கு விண்ணப்பித்த சகல கழகங்களின் பிரதிநிதிகளையும் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்துக்கு வருகைதருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (ஐ)

# தென்மராட்சிப் பாடசாலைகளை சொந்த இடத்தில் இயக்க நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.8

தென்மராட்சி கல்வி வலயத்தில் படையினர் முகாமிட்டுள்ள பாடசாலைகள், முகாம் காவலரண்கள் போன்றவற்றின் அருகில் உள்ள பாடசாலைகள், மக்கள் செல்ல அனுமதிக்கப்படாத பகுதிகளில் உள்ள பாடசாலைகள் ஆகியவற்றின் விவரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் அரச அதிபர் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பாடசாலைகளில் முகாமிட்டுள்ள படையினரை வெளியேற்றி பாடசாலைகளை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு மீள்குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்து அது தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபருக்கு அமைச்சர் உத்தரவிட்டார். அரச அதிபர் வலயக் கல்விப்பணிப்பாளரிடம் அந்த விவரங்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, இயற்றாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, ஒட்டுவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரம்பகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய 13 பாடசாலைகளில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் -

வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, கைதடி கலைவாணி வித்தியாலயம் ஆகிய 7 பாடசாலைகள் காவலரண் அல்லது முகாமுக்கு அருகில் உள்ளன என்றும் -

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.பாடசாலை, தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், கோயிலாகண்டி மகாலட்சுமி வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகிய 6 பாடசாலைகளும் மக்கள் செல்ல அனுமதிக்கப்படாத பகுதிகளில் உள்ளதாகவும் - கூறப்படுகிறது. (ஓ-117)

## தவறவிடப்பட்ட ஆபரணம்

யாழ்.கந்தர்மடம் பகுதி வீதியொன்றில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று, கந்தர்மடம் சைவப்பிரகாசம் வித்தியாலய அலுவலகத்தில ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் உரியவர்கள் அடையாளம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஆஸ்பத்திரியில் சிறுதொகை பணம் கண்டெடுப்பு

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட சிறுதொகைப்பணம் ஆஸ்பத்திரிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (ஓ)

## இலங்கையர் இருவர் சென்னையில் கைது!

சென்னையில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு இலங்கையரை நேற்றுமுன்தினம் தமிழ்நாடு போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த அந்த இலங்கையர்களிடமிருந்து 70 குப்பிகளில் அடைக்கப்பட்ட 270 கிராம 'ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஓ-ரி)

## புதிய மின்மாற்றி

யாழ்ப்பாணம்,ஜன.8

நீர்வேலி கந்தசுவாமி கோயில் சந்தியில் இலங்கை மின்சார சபையால் புதிதாக மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கான மின்சார விநியோகத்துக்கு வசதியாகவே இம் மின்மாற்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது. (க-173)

---

## வைத்தீஸ்வராச் சமூகம்
## உளமார வாழ்த்துகிறது

க.பொ.த. உ/த 2001 ஆண்டுப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் கல்விச் சமூகத்திற்கும் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களையும் பரீட்சையின் 100% பெறுபேற்றிற்கு உறுதுணையாக நின்ற அதிபர், ஆசிரியர்களையும் கல்லூரிச் சமூகம் உளமார வாழ்த்தி வணங்குகின்றது.

| | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|
| ரஜனி மோகனதாஸ் | 3A | 07 |
| விஜிதா சபாரட்ணம் | 2AB | 49 |
| விஜயன் சரவணன் | 2AB | 89 |
| லதா தங்கராஜா | A2B | 92 |
| சுஜாதா இரட்ணம் | 2AB | 97 |
| இராஜராஜேஸ்வரி முருகானந்த சர்மா | A2B | 103 |
| தணிகாசலம் தயாபரன் | A2B | 105 |

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம். (96820) - கல்லூரிச் சமூகம்.

---

## வாழ்த்துக்கள்



அகவை அறுபதை நிறைவுசெய்யும் எங்கள் அன்புக்குரிய எமது நிர்வாக அலுவலர்

### திரு.வை.வல்லிபுரம்


அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*கோப்பாய்.*

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.
(96827)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரவேலு பரமசாமி

மண்ணில் 15-04-1942 விண்ணில் 20-12-2001

**திதி: 08-01-2002**

அன்போடும் பாசமோடும் எம் உடன் வளர்ந்து
அறப்பணியாற்றி அப்பணிக்கு வழிகாட்டிய தம்பியே!
ஆத்மா சாந்தி பெற வைரவரடி வணங்கி நிற்கும்

*தலையாழி,*
*கொக்குவில் கிழக்கு.*

சகோதரி
திருமதி கு.ஷண்முகடாஸ். (96835)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை



நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றி அதிபர் சேவை தரம் 2 II இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள

### திரு. மு.விக்கினேஸ்வரன்

(Pr. Trd. B.A., Dip. in Edu.)

*அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர்கள்
பாடசாலை அபி. சங்கம், பழைய மாணவர் சங்கம்.
யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை, உரும்பிராய்.
(968..)

---

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம் அலுவலகம்
45, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## 34ஆவது பொதுக்கூட்டம்

**09-01-2002**

நாளை 09.01.2002 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்

மங்கள விளக்கு - திரு. இ.இராமலிங்கம்
(யாழ் மாநகர ஆணையாளர்)

| | |
|---|---|
| வாழ்த்துரை | :- திரு.செ.மார்லின் பெர்ணான்டோ |
| வரவேற்புரை | :- திரு.S.தேவதாஸ் (பொருளாளர்) |
| தலைவர் உரை | :- மெய்யழகன் எட்வின் |
| செயலாளர் உரை | :- திரு.யே.ரஜனிகாந்த் |
| பிரதம விருந்தினர் | :- திரு.செ.கந்தையன் பிரதி முதல்வர், யாழ்.மாநகரசபை |
| சிறப்பு விருந்தினர்கள் | :- திரு.மனுவல் மங்களநேசன் (யாழ்.மாநகர சபை, சுகாதாரக் குழுத் தலைவர்) |
| | திரு.மு.தவநாதன் (யா.மா.ச. உறுப்பினர்) |
| | திரு.ஜீவரட்ணம் பொறுப்பதிகாரி (பொ.சு.பொ.பிரிவு) யா.மா.ச. |
| | திரு.தேவலோகராசா |
| | திரு.முகுந்தன் மேற்பார்வையாளர் - யா.மா.சபை |
| | திரு.க.மணிபல்லவராஜன் (அமைப்பாளர், E.P.D.P.) |

குறிப்பு:- இக்கூட்டத்திற்கு சுன்னாகக் கிளைச் சங்கமும் வல்வெட்டித்துறைக் கிளைச் சங்க அங்கத்தவர்களும் கலந்துகொள்வார்கள்.

முக்கிய குறிப்பு:- குலுக்கல் முறையில் ஐந்து அங்கத்தவர்களுக்கு பரிசு வழங்கப்படும். அதிர்ஷ்டம் யாருக்கோ அவர்களே பெற்றுக்கொள்ளுங்கள். சென்ற வருட செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல். சென்ற வருட பொருளாளர் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்.

நன்றி உரை :- திரு.J.ரஜனிகாந்த் (காந்தன்)

2002 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அலுவலகம்:
45, சென்.பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம். (96833)

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம்.

---

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து முருகேசு

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த நாகமுத்து முருகேசு 04.01.2002 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிவகாமி தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - யோகம் தம்பதியினரின் மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும், செல்லம்மா, நாகலிங்கம், வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், கண்மணி, யோகநாதன், தம்பித்துரை (கண்டி, பொறியியலாளர்), பகவதி, நாகேந்திரம், இராசாத்தி, சந்திரராஜா (கனடா), நகுலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சகுந்தலாதேவி, கந்தசாமி, சந்திராதேவி, முத்துலட்சுமி, நவரட்ணம், மதிவதனி ஆகியோரின் மாமனாரும். காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் துஷாந்தினி, கார்த்திகாயினி, ஜெகதர்சன், செந்தூர்யா, சபீதா, கௌசீகன், சஜந்தா, சிந்துஜா, சற்சொரூபன், ஜீவப்பிரியா, பிரசன்னா, பிரவீனா, ஜனோசா, தனுஜன், அபிரா, கௌசீகன், சுயேன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக [illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி,*
*வைரவ கோயிலடி,*
*அச்சுவேலி.*
(96828)

தகவல்:-
மு.நாகேந்திரம்.
(மகன்)

### திருமதி சதாசிவம் காமாட்சிப்பிள்ளை

(குணம் அக்கா)

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் காமாட்சிப்பிள்ளை 06.01.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், சதாசிவத்தின் அன்பு மனைவியும், பேரின்பநாயகம் (லண்டன்), அவர்களின் அன்புச் சகோதரியும், சிவசோதிமலர், ஜீவமலர் (ஆஸ்திரேலியா), சிறீமலர் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி (U.N.H. C.R.), சிறீச்சந்திரன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), ஜெயச்சந்திரன் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், நிலாந்தி (ஆசிரிய மாணவி, கோப்பாய்), துஷாந்தி, ஜெயந்தி, அனோஜன், மயூரன், சுகண்யா, ஜெனனி, சாலினி, தாரணி, விதுர்ஷன், தர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.01.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.*
(96834)

தகவல்:
கந்தசாமி சிவசோதிமலர்
(மருமகன், மகள்)

## கடவுச்சீட்டு மோசடி; ஈழத்தமிழர் ஒருவர் தமிழகத்தில் கைது!

சென்னை,ஜன.8

போலிக்கடவுச்சீட்டைப் பயன்படுத்தி விமானம் மூலம் கோயம்புத்தூரிலிருந்து சார்ஜாவுக்கு செல்ல முற்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவரை நேற்று தமிழகப் பொலீஸார் கைதுசெய்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த அந்த நபர் வேறு ஒருவருடைய கடவுச்சீட்டில் தனது புகைப்படத்தை ஒட்டி மோசடிசெய்து, அதனைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சித்தபோதே தாம் அவரைக் கைதுசெய்ததாகத் தமிழகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-4-ரி)

## சைவத்தமிழ் ஆய்வு நூலகம் தெல்லிப்பழையில் நேற்று திறப்பு

வலி.வடக்கு,ஜன.8

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 77 ஆவது பிறந்த நாள் விழாவை ஒட்டி 'சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தை' உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் இந்த விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான வரலாறு பற்றிய ஆங்கில நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிவத்தமிழ்ச்செல்வி ஆய்வு நூலக கட்டடத் திறப்பு விழா மலரை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் சபா.ஜெயராசா வெளியிட்டு வைத்து ஆய்வுரை நிகழ்த்தினார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறக்கொடை நிதியில் இருந்து 30 ஆயிரம் ரூபா வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களின் கண் சத்திர சிகிச்சைக்கென மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினத்திடம் வழங்கப்பட்டது.

வன்னியில் உள்ள மக்களின் மருத்துவ சேவைக்கென மல்லாவி அரசினர் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் கொள்வனவு செய்ய 75 ஆயிரம் ரூபா செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வின் யாழ்.வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## பண மோசடியில் பிடிபட்ட படை வீரர்!

கொழும்பு,ஜன.8

பனாகொடை இராணுவ முகாமில் 98 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு வழங்கப்படவிருந்த சம்பளப் பணத்தைக் கையாடியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஒ-4)


## கண்ணீர் அஞ்சலி

யா/வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர்
க.சுரேஸ் (A/L 2002 - வர்த்தகம்)
அவர்களின் தந்தையார்

### பழனிவேல் கந்தசாமி

அவர்கள் காலமானதையிட்டு துயர் அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- நண்பர்கள்.

(96842)



குருபாதம் துணை

## முதலாவது சிரார்த்த தினம்

ஜனனம்
22 - 06 - 1925



முருகனடி
20 - 12 - 2000

சிவப்பிரம்மஸ்ரீ

### சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்

*(நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு)*

தினம் தொழுது வணங்குவோம்.

ஆன்மதானத்தின் தொடர்பினையும் நல்லறிவினையும் நலமுடன் நமக்கருளிய ஞானகுருவினைத் தினமும் நாம்தொழுவோம். அன்பும் பணிவும் அடங்கியறிவும் நாம் தெளிவுடன் பெறவே ஆகமம், வேதம், நித்திய பூசை, காமிய பூசை யாவும் அறிவுடனே நல்கிய ஆசான் சுவாமிநாத இராஜேந்திர குருநாத சுவாமியே! மரதக்கமலம் பற்றுடன் பற்றியே பாசவினை களைவோம். ஞானத்தெளிவினை நல்கிய ஞான குருவே பாதம் பணிந்து போற்றுகிறேனே!

மாணவன்
இ.பாலகிருஷ்ணக்குருக்கள்
கெருடாவில், தொண்டமனாறு.

(C/20133)



## 41ஆம் நாள் நினைவலைகளும் சபிண்டீகரண அழைப்பும்

ஓரடி மண்ணில்
20 - 09 - 1918



ஆறடி மண்ணில்
29 - 11 - 2001

### அமரர் கதிரன் வீரகத்தி

ஐயனேயுமை மறக்கலுமோ...! நெஞ்சமே
வையகம் போற்ற மின்னாமல் முழங்காமல்
சொர்க்க வாயில் புகுந்தனையோ...! ஐயனே
பார்க்கப் பார்க்க திகட்டாத வண்ணமுகமே!
உழைப்பால் உயர்ந்தீரே...! செல்வங்களை கல்வியால்
உயர்த்தினீரே...! ஐயகோ பிஞ்சுள்ளங்கள் தவிக்கிறதே...
மனதாற்ற ஆறுதல் வார்த்தையில்லையே....ஐயனே
நெஞ்சிருக்கும் வரை தங்கள் நினைவிருக்குமே...!
எண்பத்து நான்கென்பர் அகவை தமக்கு
எண்ணலுமோ தங்கள் கம்பீரம்...!
பண்பாளராய் பொதுப்பற்று மிக்கவராய்
எண்ணத்திலும் தீமை கலவாத் பூமனதுடன்
மண்ணில் மாமனிதராய் மிளிர்ந்தீரே... ஐயனே!

தங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

*ஓம் சாந்தி...! சாந்தி...!! சாந்தி...!!!*

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*கலாவாணி ச.ச.நிலையம்,*
*கம்பர்மலை, வல்வெட்டித்துறை.*

- குடும்பத்தினர்.

(96836)


## அமைச்சர்களின் சலுகைகளை குறைக்கத் திட்டம்

கொழும்பு,ஜன.8

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் விரைவில் குறைக்கப்பட உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் கலந்துகொண்ட விஷேட பொதுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஓர் அமைச்சருக்கு ஒரேயொரு வாகனம் மட்டுமே வழங்கப்படும் என்றும் -

அவர்களுக்கான செலவுகளும் குறைக்கப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விஷேட நிகழ்வுகள் தொடர்பாக அரச ஊடகங்களில் செய்யப்படும் பிரசாரங்கள் மட்டுப்படுத்தப்படும் எனவும் ரணில் மேலும் குறிப்பிட்டார். (ஒ-4-ரி)


**பொருளியற் கல்லூரி**
(இரு இடத்தில்)

யாழ்நகரில் - 9.00 a.m.
இணுவிலில் - 3.00 p.m.

**A/L 2004**
**கலை - வர்த்தகம்**

ஆரம்பம்:-
12.01.2002

(96830)



**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
ஷியாம், சிம்ரன், ஜோதிகா நடித்த

**12 B**

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00

(C/20092)

நாளை முதல்
**விரலுக்கேத்த வீக்கம்**



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

கமல் (இரட்டை வேடம்),
மனீஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த

**ஆளவந்தான்**
(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C/20090)



**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்
அஜித், பார்த்திபன், தேவயானி நடித்த

**நீ வருவாய் என**

(96825)

நாளை முதல்
**பாளையத்து அம்மன்**

காட்சிகள் 11.00, 3.00


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா இராசம்மா

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு, நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா இராசம்மா நேற்று திங்கட்கிழமை (07.01.2002) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் - கறுத்தப்பிள்ளை தம்பதியினரின் மகளும் பூரணலிங்கம், அமிர்தலிங்கம், நாகபூஷணி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி, கமலாதேவி, பாலசிங்கம் (சின்னராசு), குலவீரசேகரம் ஆகியோரது மாமியாரும் மதனராசன் (கனடா), மதனரூபி (யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் - இறுதி வருடம்), கோகுலவாணி, சுகந்தா, தயாபரன், சசிகலா, குருபரன், சயந்தினி, சர்மிளா, வசீகரன், சிந்துஜா, பார்த்திபன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் தகனக் கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*எல்லாளன் வீதி,*
*நவக்கிரி,*
*புத்தூர்.*

(C/20135)

தகவல்:
பொ.பாலசிங்கம்
(சின்னராசு - மருமகன்)

### இராசரத்தினம் மகேந்திரராசா

**(உழத்தம்பி - வல்வெட்டி)**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டி உழத்தம்பிக் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மகேந்திரராசா (04.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2002 புதன்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உழத்தம்பி,*
*வல்வெட்டி.*

(C/20134)

தகவல்:-
செல்வி ம.மீனலோஜினி
(எக்ஸ்-ரே தொழில்நுட்பவியலாளர்)
மந்திகை மருத்துவமனை

### பழனிவேல் கந்தசாமி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பழனிவேல் கந்தசாமி நேற்று (07.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிவேல் தேவர் - குமரம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னச்சாமி தேவர் - லட்சுமி தம்பதியினரின் மருமகனும், கௌரிஅம்மாவின் அன்புக் கணவரும், திருமதி இந்திராதேவி, விமலேந்திரன், சுரேஷ், அபர்னா, சுபானுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரின் அன்பு மாமனாரும், சுபோதினியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*492,காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(96843)

தகவல்:
விமலேந்திரன்
(மகன்)

### நடேசபிள்ளை மங்கையர்க்கரசி

வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த நடேசபிள்ளை மங்கையர்க்கரசி 06.01.2002 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், மேகவர்ணன், கோகிலவர்ணன், ஜெயகௌரி, தேவலக்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினராஜாவின் மாமியாரும், உஷாராணி, வைகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 11.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1/2,கேசாவில் பிள்ளையார் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(C/20136)

தகவல்:
மேகவர்ணன் (மகன்)
(ஒலி அமைப்பாளர்)
விக்கினராஜா (மருமகன்)

### கந்தையா சிவபூரணம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபூரணம் நேற்று (07.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - இராசமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்புச் சகோதரியும், ஆனந்தநடராஜா, ஆனந்தலக்சுமி, தியாகேஸ்வரி, தங்கரட்ணம் (ஆசிரியை - கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), காலஞ்சென்ற நடேசலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், சரஸ்வதி காலஞ்சென்ற குருபாலசிங்கம், நித்தியானந்தம், இராஜரட்ணம் ஆகியோரின் மாமியாரும், நாகேஸ்வரி, சுதாகர், மயூரினி, சுஜித்தா, கிருத்தியா, சஞ்சுதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*"ஆனந்த வாசா"*
*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

(C/20137)

தகவல்:
K.இராஜரட்ணம்
(மருமகன்)

# மதனராஜன் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தாக்குதல் மற்றும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ந.மதனராஜனும், ஈ.பி.டி.பியின் தீவக இராணுவப் பொறுப்பாளரான நெப்போலியனும் பின்னர் தலைமறைவானதை அடுத்து அவர்களுக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மதனராஜன் நேற்றுத் திடீரென நீதிமன்றத்தில் சரணடைந்தார். நெப்போலியன் இன்னும் தலைமறைவாக உள்ளார்.

**மதனராஜனின் விளக்கம்**

தனக்கு உடல் நிலை சரியில்லாததால் முதலில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை எனவும் -

அதற்கான மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் -

பின்பு தான் நீதிமன்றத்தில் ஆஜராக முற்பட்டபோது சட்டத்தரணி எவரும் கிடைக்காததால் அதனைச் செய்ய முடியவில்லை எனவும் -

அதனால் தனக்கு மனப் பதற்றம் ஏற்பட்டதுடன் தொடர்ந்து உடல் நிலை பாதிக்கப்பட்டதாகவும் -

அவர் நேற்று நீதிவானிடம் தெரிவித்தார். சட்டத்தரணி எவரின் உதவியுமின்றி அவர் நேற்று நீதிவான் முன்னிலையில் சரணடைந்தது குறிப்பிடத்தக்கது.

தனக்கு 'ஆஸ்துமா' நோய் இருப்பதால் மருந்து எடுத்துவருவதாகவும்-

எனவே தன்னை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதி வழங்குவதுடன் கடந்த பொதுத் தேர்தலில் தான் வெற்றியடைந்தமையால் நாடாளுமன்றில் சத்தியப்பிரமாணம் செய்வதற்கும் அனுமதி வழங்குமாறும் -

அவர் நேற்று நீதிவானிடம் கோரினார்.

இதற்கமைய சட்ட வைத்திய அதிகாரி மூலம் அவரைப் பூரண பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் -

அவரை நாடாளுமன்றத்துக்கு கூட்டிச் சென்று சத்தியப் பிரமாணம் செய்வதற்கு வசதி செய்து கொடுக்கும்படி சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவுறுத்தும்படியும் -

யாழ். சிறை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அவரைப் பிணையில் விடுவதற்கு இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்பதால் 16ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிவான் பணித்தார். (உ)

## துணைப்படை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பும் வினாவின் முழு விவரம் வருமாறு:-

*வழமையான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாக செயற்படுகின்ற ஆயுதப் படையினருடன் இணைந்து பணியாற்றும் தமிழ் குழுக்களே பத்திரிகையாளர்களுக்கு எதிரான உரிமை மீறல்கள் உட்பட பல மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பாகவிருந்துள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மே 31ஆம் திகதி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*(I) பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுக்களின் விவரம் -*

*(II) அவர்கள் துணைப் படை என்ற பெயரில் செயற்படுகின்றார்களா? -*

*(III) அரசு அவர்களுக்கு மாதாந்தம் செலுத்தும் தொகை என்ன? -*

இந்தக் கேள்விகளுக்கு பாதுகாப்பு அமைச்சர் இன்று நாடாளுமன்றத்தில் பதில் அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக அமைந்துள்ளமையினாலும் -

(IV) இச்சட்டத்தின் மூலம் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அளவு கடந்த அதிகாரம் பொலீஸாரால் தவறான முறையாகப் பயன்படுத்தப்படுவதாவும் -

இச்சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று விநாயகமூர்த்தி தமது பிரேரணையில் கோரியுள்ளார்.

நாடாளுமன்றின் வெள்ளிக்கிழமைக்கான நிகழ்ச்சி நிரலில் இந்தப் பிரேரணை சேர்க்கப்பட்டுள்ள போதிலும் அன்றையதினம் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பது தெரியவரவில்லை.(உ)


**சிறப்புச் சொற்பொழிவு**

அதி உயர் நீதிமன்ற நீதியரசர்

கௌரவ உயர்திரு. சி.வி.விக்னேஸ்வரன்

அவர்கள்

"ஆன்மீகமும் இளைஞர்களும்"

என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இடம் : யா/வட்டு.மத்திய கல்லூரி

காலம் : 08-01-2002 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணி (புதிய நேரம்) (96839)

**சீமெந்து விற்பனை**

ஓரிரு தினங்களில் மிற்சுயி (Mitsui), அட்லஸ் (Atlas) சீமெந்துகள் வரவிருப்பதால் வாடிக்கையாளர்கள் அனைவரையும் ஓடர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: **ஜெசிபா ஏஜென்சி,**
132,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2407 C/20131 FAX: 2140

**A/L 2004**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 12-01-2002
சனி 8 மணி
**விக்னா கல்வி நிறுவனம்** (96783)

**O/L எடுத்தவர்களுக்கான ENGLISH**
புதிய பிரிவு (2004)
ஆரம்பம் - 10.01.2002
காலை - 8.30 மணி
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane, Pointpedro.
By:MR.B.JOTHY
பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்களுக்கான வகுப்புகள்
ஆரம்பம்.10.01.2002 - பி.ப. 4மணி (96726)

இதோ! ஆரம்பம்
**A/L 2004 பிரிவு**
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்:- நாளை (09.01.2002) புதன் 4.00 p.m. (N.T.)
**திகழ் கல்வி நிறுவனம்**
இணுவில். (96821)

**ஸ்ரீ கல்வி நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.
A/L 2002 பௌதிகவியல்
துரித மீட்டல் வினா - விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு, வியாழன் பி.ப. 2.30 மணி
ஆசிரியர் S.R.M.VARNAN
Note:- ஏனைய பிரிவுகளும் ஆரம்பம்.
(96807) - நிர்வாகி.

**கணக்கீடு A/L 2004**
ஆசிரியர்:- **S.தவா**
B.Com. (Hons)(Acc.Spl.)
ஆரம்பம்:- நாளை 12மணி (C/20132)
NEW SCIENCE COLLEGE JAFFNA

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
A/L 2004
கலை, வர்த்தகம், கணித, உயிரியல் வகுப்புகள்
எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரிய குழு.
ஆரம்பம்: 12.01.2002 சனி மாலை 3.00 (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன) (96785)

**BRIGHTMAN**
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
**A/L 2004**
கணித, உயிரியல், கலை, வர்த்தக பிரிவுகள்.
எமது "SUPER GRADE" ஆசிரியர் குழுவினால்
ஆரம்பம:- 11.01.2002 Fri.2.30 p.m.
(விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ளவும்) (96812)

**அறிவித்தல்**
எமது அச்சுவேலி கணனிப் பயிற்சி நிலையத்தில் ஜெனரேட்டர் வசதியுடன் கணனிப்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களும் 10.01.2002ஆம் திகதி 10 மணிக்கு சமுகமளிக்கவும்.
(96837) Director UNIVAC

**BEACON**
யாழ்நகர்
2004 A/L
கலைப்பிரிவு
எமது ஆசிரியர் குழு
Log. - S.S.மனோகரன்
Tam. - பங்கையற்செல்வி, நாக.தமிழிந்திரன்
H.C.Hin. - உமாசங்கர்
C.H.R. - துவாரகா
Dra. - சுதன்
Geo. - ஞானேஸ்வரன்
Eng. - சோதி
I.Q. - தவசேகர்
ஆரம்பம்: ஜனவரி 12
நேரம் 7 a.m. (ப.நே.) (96817)

**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
2004 A/L கலை. வர்த்தகம்
ஆரம்பம்:- 09.01.2002 3 p.m.
யாழ்நகர் ஆசிரியர் குழு
Eco. - வரதராஜன்
Com. - பிரபல ஆசிரியர்
Acc. - பாலா
Tam. - தர்மராஜா
Log. - சத்தியசீலன்
H.C. - பத்மராஜா
His. - சுஜிகரன்
Note:
★ A/L Day பொருளியல் அனுமதி 250ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இன்னும் 24 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ O/L எடுத்த மாணவர்களுக்கு ஆங்கிலம் பிரிவு III (25) மிகவிரைவில் ஆரம்பம்.. (96824)

To become a computer professional.........join at IIS

**Computer Courses**

New Batches Start on : 12/01/2002 Saturday at 9.00 am

| Courses | Duration (Month) |
|---|---|
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 5 |
| Diploma in Visual Basic Programming | 5 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Diploma in Computer Programming | 8 |
| Diploma in Personal Computer Specialist | 8 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |



✓ பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
✓ தகுதி, அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.
✓ நவீன கணனித் தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி
✓ Multimedia Projector வசதி கொண்ட விரிவுரை மண்டபம்.
✓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த, விண்ணப்பிக்கத் தவறிய அனைத்து மாணவர்களுக்குமென ஆரம்பிக்கப்படும் பயிற்சி நெறிகள்
✓ பல்வேறு வகையில் கட்டணச் சலுகைகள்

**Institute of Informatics Studies**

Head Office:
100, Clock Tower Road, Jaffna.
021-2831 Email : iis@sltnet.lk

Branches:
Nelliyady Karaveddy.
Main Street, Chankanai.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.